# வரிக்கவிகள்



கவிநாயகர் வி. கந்தவனம்

# வரிக்கவிகள்

கவிநாயகர்

வி. கந்தவனம்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்


| | |
|---|---|
| நூல்: | வரிக்கவிகள் |
| ஆசிரியர்: | வி. கந்தவனம் |
| முதற் பதிப்பு: | நவம்பர் 2002 |
| பக்கம்: | XII + 113 |
| எழுத்தமைப்பு: | மா. கனகசபாபதி |
| அட்டையமைப்பு: | புகாரி |
| அச்சுப் பதிப்பு: | விவேகா அச்சகம் |
| வெளியீடு: | கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் |
| பதிப்புரிமை: | வாரணன் கந்தவனம் |

| | |
|---|---|
| Title: | VARIK KAVIKAL (Non - metrical poetic lines) |
| Author: | Vina Kandavanam |
| First Edition: | November 2002 |
| Pages: | XII + 113 |
| Typesetting: | M. Kanagasabapathy |
| Cover design: | Buhari |
| Printed & Bound by: | Viveka Press |
| Published by: | Tamil Writers' Association of Canada |

Copyright: © 2002 by Varanan Kandavanam
All rights reserved under Copyright Conventions.

Canadian cataloguing in Publication Data for this book is available from the National Library of Canada.

ISBN 0-9731939-0-5



இரசிகமணி -
இலக்கியத்தின் இதயமணி -
அமரர் கனக. செந்திநாதன் அவர்களுக்கு
இருபத்தைந்தாவது ஆண்டு நினைவாக
இந்நூலைச் சமர்ப்பித்து -
தூண்டுகின்றேன்
எனது நினைவுத் தீபத்தை!

- வி. கந்தவனம்



இரசிகமணி கனக. செந்திநாதன் படம் உதவி:
மித்ர வெளியீடு, சென்னை

# பதிப்புரை

பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம், அதன் மதிப்புக்குரிய தலைவர் கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்களின் 'வரிக்கவிகள்' என்ற தலைப்பை உடைய இந்தக் கவிதை நூலைக் கனடாவில் வெளியிட்டு வைப்பதில் மிகவும் பெருமையடைகின்றது.

19-06-1993இல் ஆரம்பிக்கப்பட்ட எமது கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் இன்று கனடியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மிகப் பெரிய பங்காற்றி வருகின்றது என்றால் மிகையாகாது. பலவகையான கருத்தரங்குகள், கவியரங்குகள், பிற நாடுகளில் இருந்து வரும் தமிழ் இலக்கிய எழுத்தாளர்களை வரவேற்று கௌரவிப்பது, மறைந்த எழுத்தாளர்களுக்கு இரங்கற் கூட்டம் வைப்பது, நூல்களை அறிமுகம் செய்வது, வெளியிடுவது, வெளியீட்டு விழா வைப்பது, தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பது போன்ற பல சேவைகளை எமது இணையம் தொடர்ந்து இந்த மண்ணில் செய்து வருகின்றது.

இதுவரை அமரர் கலாநிதி க. செ. நடராசா அவர்களின் 'உள்ளதான ஓவியம்' என்னும் காவியம், கவிஞர் அனலை ஆறு. இராஜேந்திரம் அவர்களின் 'பூவும் புல்லிதழும்' என்னும் திருக்குறள் மீதான ஒப்பீட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு, 'அரும்பு' என்னும் தலைப்பைக் கொண்ட கனடியத் தமிழ் எழுத்தாளர் சிறுகதைத் தொகுப்பு, 'உறங்குமோ காதல் நெஞ்சம்' என்னும் குரு அரவிந்தனின் நாவல் போன்றவற்றை இதுவரை வெளியிட்ட எமது இணையம் இன்று கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்களின் 'வரிக்கவிகள்' என்ற இந்தக் கவிதை நூலையும் வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சியும் பெருமையுமடைகின்றது.

எமது அடுத்த தலைமுறையினரும் பயன் பெறும் வகையில் இவரது நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு அவைகளும் இவரது பெருமையை அறியக்கூடிய முறையில் வெளியிடப்பட வேண்டும் என்ற எனது ஆதங்கத்தைத் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து, கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

அன்புடன்
குரு அரவிந்தன்
செயலாளர்,
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

# மதிப்புரை

வாழ்க்கையை வாழ்க்கைக்குச் சொந்தமாக்கி வைக்கின்ற வரிகள் நிரம்ப இத் தொகுதியில் உள்ளன.

அழகியலும் சமூக உணர்வும் ஒன்றையொன்று விட்டுவிடாமல் கைகோர்த்துக் கொண்டு பவனிவர வைத்திருக்கும் கவிநாயகரின் தனிச் சிறப்பை இங்கும் காணலாம்.

முந்திய செய்திகளைச் சொல்லியும் சிந்தையைத் தொடுகின்றார். இன்றைய நிலையை எடுத்துச் காட்டியும் உலகைத் திருத்துகின்றார்.

பல வரிகள் சிறப்பானவை!
சில வரிகள் சிவப்பானவை!

சமுதாயம் மேம்படவேண்டும் என்ற சீரிய நோக்கோடு பழமையும் புதுமையும் கலந்த புதிய வழித் தடத்தில் இவரது கவிதைத் தேர் களம் காண்கின்றது.

நல்ல சமுதாயத் தோற்றத்திற்கும் நவீன இளைஞர்களின் மாற்றத்திற்கும் இவரது எழுத்துக்கள் சமூக அக்கறையுடன் நகர்கின்றன.

இத் தொகுதியில் 65 வரிக்கவிகள்!
அனைத்தும் விழி உடையவர் வியந்திடும் கவி வரிகள்!!

கவிநாயகரின் முதல் மரியாதையே - எல்லையில்லாத இன்பம். அது அங்குள்ளவர் வணங்கும் - இங்குள்ளவர் ஏங்கும் புனித பூமி.

உலகத் தலைவர்களில் இளைஞன் யார்? என்று உங்கள் மனதில் கேட்டுப் பாருங்கள். அனேகமாக அது தரும் பதிலையே தனது கூர்மையான கண்களால் படம் பிடித்துக் காட்டுகிறார்.

அவனால் குனிந்தவர் - நிமிர்ந்தார்; நிமிர்ந்தவர் - விழித்தார்; விழித்தவர் - திரண்டார்.

எழுத்துலகில் அச்சம் அற்ற குறமகளின் - மறமகள் தமிழீழம் தவிர்ந்த வேறெதிலும் இச்சம் அற்றவரென்பதால் கவிநாயகரிடமிருந்து கிடைப்பது வீரவணக்கம்.

கவிநாயகரைக் கவர்ந்த ஊர் - குரும்பையூர்! எல்லா ஊர்களுக்கும் எழிற் சிகரமாய் அதனை அவர் காட்டுகிறார். - சிவ்வென்று சிவந்தது மனது.

உதவாதகை - ஒட்டி இருந்தால் என்ன? ஒட்ட முறிந்தால் என்ன? எனக் கைதட்டிக் கேட்கும் அவர், இதயத்தின் எல்லாப் பரப்புகளிலும் கம்பீரமாய் கைவீசி நடக்கின்றார்.

தமிழுக்கும் கால் முளைத்தால் - வாசகர்களின் அறிவு விரியும்! அதில் கவிநாயகரின் ஆற்றல் தெரியும் எனச் சுவடு பதிக்கிறது - நெடில் நடை.

படம் ஒன்று அதில் பாடமாகின்றது.

இவ்விதமான சொல் விளையாட்டுக் கவிகள் இத் தொகுதியில் அதிகம். கை, கால், தலை, வாய், பால் பற்றிய கவிகள் நல்ல உதாரணம்.

கைவந்த கலை! என்று மட்டும் சொல்லிவிட்டு யாராவது நிறுத்திவிட்டால் அவர் ஏற்கனவே கவிநாயகரின் - தன் கையே தனக்குதவி - என்ற கவிதையைச் சுவைத்து விட்டதாக அர்த்தம்.

எங்ஙனம் மலரும் இலக்கியங்கள்? என அவர் சிறிய கோபம் கலந்து கர்ச்சிப்பது எம்முள் பலரை ஏகடியம் செய்து பரிதவிக்க வைக்கிறது.

காட்டுப் பூ நாட்டுப் பூவாக.... கவிநாயகரின் ஏக்கக் குரலும் அல்ல! எக்காளக் குரலுமல்ல! விமர்சகர்களை விமர்சிக்கச் சொல்கின்றார்! இப் பொழுதெல்லாம் 'அ' எழுத

ஆரம்பித்தவுடனேயே அவனவன் புலவனாகி விடுகின்றான் என்றெழுதும் விமர்சகர்களை விமர்சிக்கச் சொல்லவில்லை. நியாயம் தானே?

புகைச்சல் பிடித்தலையும் தமிழன் முத்தாய்ப்பாக என்ன செய்வான்? தானும் ஒரு சங்கம் அமைப்பான் என்பது நக்கீரத் தாக்குதல்.

சுயநல மேடையில் பொதுநல நாடகம் ஆடிடும் தமிழனை நன்கு அடையாளம் காட்டுகின்றார்! இனியாவது திருந்துவானா?

தலைவன் என்று வலம் வந்து வணங்குகின்றாயே? என்று அவர் கேட்பது கூட முதன்மைத்துவமான கேள்வி! பளாரென்று அவர் அடித்திருந்தால் கூட ரோசமுள்ளவனுக்கு இந்த அளவிற்கு வலித்திருக்காது.

வீட்டில் சிரிப்புக்குக் குறைச்சல் இல்லை எனின் என்ன செய்ய வேண்டும்? பணமிருந்தும் பயனில்லை காட்டிடும்.

கோபக்காரனுக்கு எது வரும்? பதில் தெரிய, வரும் வருத்தம்! என்கிறார் ஆத்திரப்படாத கவிநாயகர்.

உங்கள் மனைவியை விட்டு வேறு ஒரு பெண்ணுக்கு எப்ப தாவப் போகின்றீர்கள்? பயபத்தியுடன் பதிலளிக்காது 51ம் பக்கத்தைப் புரட்டுங்கள். சமயக்கொள்கையும் தெரியும். சமயத்துக்கு ஏற்ற மாதிரி கொள்கையை ஆக்கக் கூடாது என்பதும் புரியும்.

முனிவரையும் பழுதாக்குவது எது என அறிய ஏன் தவம் இருக்கவேண்டும்! அழகாகச் சொல்கின்றார் . உலகத்தின் அழகை நயக்க உள்ளத்தின் அழகு போதுமே.

ஒன்றாய் - இரண்டாய் - மூன்றாய் - 36 துமிகள் இதயத்தில் பட்டு இனிமை கொட்டுகின்றன!

சிரித்துக் கொண்டே வாழ்ந்தால் சிறப்பு. சிரிப்புக் கிடமாய் நடந்தால் பழிப்பு என்பதில் தத்துவம் கர்வத்துடன் சிரிக்கிறது.

கனடாவில் எத்தனை தமிழர் தெரியுமா? செவ்வனே மதிப்பிடுகின்றார். படித்தபின் உங்கள் கணிப்பும் மாறாது.

ஊர்போற்றும் நம்மவர் கவிஞர் நிலா குகதாசனும் பார் போற்றும் எம்மவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் எம்முள் மையமாக அமர்ந்திருக்கும் அமரர்கள். அவர்களுக்கும் உண்டு அஞ்சலிப் பூக்கள்.

பூனை குறுக்காலை போன தென்று ஆனைமேல் போக இருந்தவன் ஆமை மேல் என கடகட வெனச் சிரித்து நகைச்சுவையாய் மூடநம்பிக்கையைச் சாடுகின்றார்.

நசிந்து நாற்றமெடுத்து நாதியில்லாமல் நாசமாகிக் கொண்டிருப்பவர்களுக்கு வலுவுடைய நல் மருந்து இது!

இறக்கத் துடிக்கும் மனிதர்களைப் பறக்கத் துடிக்கும் பறவைகளாக்குவது அவரது நம்பிக்கை!

அதற்கான புத்தியும் அவருக்குண்டு. அதற்கான சக்தியும் அவரிடமுண்டு.

அவரது வெப்பப் பார்வையால் சீர்கேடுகள் சிதில மடைகின்றன.

அவரது குளிர் பார்வையால் கவிதைகள் வனப்பும் வளமும் பெற்று மிளிர்கின்றன.

வலிமைக்கு வலிமையான தனது சிந்தனைகளை எளிமைக்கு எளிமையாகத் தந்திடும் சாமர்த்தியமும் அவரிடம் உள்ளது.

யாரையும் காயப்படுத்தாமல் தான் உணர்ந்ததை உணர்த்தும் உக்கிரம் காட்டும் சாதுரியமும் அவரிடம் உள்ளது.

தமிழில் வல்லோசை இருந்தால் கூட அவர் கரம் பட்டு விட்டால் மெல்லோசை ஆகிவிடும்.

உலகியலில் அழகியல் காண்பதால் தமிழை வாழ்வியலுக்குள்

வார்ப்பவை அவரது கவிதைகள்.

மனம் நிறைவடைவது என்பது புரிதலில் - புரியவைத்தலில் உண்டு. இரண்டுமே கவிநாயகரிடம் உள்ளன.

காலப் புத்தகத்தின் பழைய அத்தியாயங்களுக்கு உரியவை அல்ல கவிநாயகரின் பின்வரும் மூன்று வரிகளும்:

எங்கள் உள்ளங்கள்
என்றென்றும் இருந்து உன்னை அர்ச்சிக்கும்
உலகெங்கும் உன்புகழைக் கர்ச்சிக்கும்.

இவை முப்பரிமாண கோணத்தில் கலாநிதி கவிநாயகர் கந்தவனம் அவர்களுக்கு நாம் சொல்வது போலவே அமைந்த அற்புத வரிகள்.

கவிநாயகர் கந்தவனம் தமிழினுள் உயர்ந்தவர்!
கவிநாயகர் கந்தவனம் தமிழருள் உயர் - தவர்!!

வாழ்க வளமுடன்!

இரசிகநிதி எஸ். ஜெகதீசன்
தாபக ஆசிரியர் - பொதிகை

# வரிக்கவிகள்

| | |
|---|---|
| காணிக்கை | III |
| பதிப்புரை | V |
| மதிப்புரை | VI |
| எல்லையில்லா இன்பம்! | 1 |
| தெய்வ மகன் | 2 |
| வீர வணக்கம் | 4 |
| பெற்றவள் சிரிப்பு | 7 |
| அம்பாள் கருணை | 8 |
| வளரும் மீண்டும் குரும்பைநகர்! | 10 |
| கொடுமை | 16 |
| உதவாத கை! | 17 |
| தன் கையே தனக்கு உதவி | 18 |
| எங்ஙனம் மலரும் இலக்கியங்கள்? | 20 |
| காட்டுப் பூ நாட்டுப் பூவாக ... | 22 |
| நெடில் நடை | 23 |
| ஆற்றாமை | 24 |
| ஏங்கும் கண்கள் | 25 |
| யார் பிழை? | 28 |
| அறிவு | 29 |
| காதல் வாசனை | 30 |
| காதல் வியாதி | 31 |
| இவள் - | 32 |
| தலைக் கூடல் | 33 |
| தலையே நீ வணங்காய்! | 35 |
| பரஸ்பர விளக்கம் | 36 |
| பால் | 37 |
| பணம் இருந்தும் பயனில்லை! | 39 |
| கடைசிக்கால விண்ணப்பம்! | 40 |
| சிரிப்பு நடிகர் பேசுகிறார்! | 43 |
| வாய் | 44 |
| மடயன்! | 45 |
| நாயிலும் கடையர்! | 46 |
| வேகத்தில் எழும்பும் தூசிகள்! | 47 |
| கோபக்காரர் | 49 |

சமயம் மாறிய சாமியாரே! 50
விசித்திரம்! 53
கவலை 55
அழகு 56
துமிகள் 57
ஊர்மண் உரம்! 64
வீடு 66
குறுக்கே வந்த தெய்வம் 67
சீவன் முத்தர் 68
முத்திக்கு ஏற்ற முழு ஆன்மா 70
ஆன்ம சிந்தனை 72
ஒவ்வொரு நாளும் உயிர்ப்பாய்! 73
உறங்கலும் விழிப்பும் 74
இமயம் சரியாது! 76
அன்னை தெரேசா 79
சொந்தப் பொங்கல் 80
வித்தார்ப்பு 82
ஹைக்கூக் கவிதைகள் 83
நம்பிக்கை 85
சொந்த வெற்றியில் சுகங்கள் அதிகம் 87
தன்னம்பிக்கை 89
நம்பிக்கை வேறுபாடுகள் 91
நம்பிக்கையீனம் 93
நம்பிக்கைத் துரோகம் 95
மூட நம்பிக்கை 96
எங்கள் நம்பிக்கைச் சின்னம் 98
நம்பிக்கை ஓட்டம் 100
நம்பிக்கைத் தீபாவளி 102
விட்டுத் தள்ளு கவலையை 103
வானதி 105
தமிழின் உச்சி குளிர்வதாக! 107
ஓவியா! செய்வியா? 109
காதலுக்குக் கண் தானம் 110
நூற்றாண்டு விழா வாழ்த்து! 112

# எல்லையில்லா இன்பம்!

சூரியனைச் சந்திரனை
வெள்ளிகளைத் துள்ளிவிழும்
அருவிகளை ஆறுகளை
கடல்களைக் காடுகளை
மலைகளைப் பொழில்களைக்
கலைகளைக் கண்டு கண்டு
களித்திடக் காலமெல்லாம்
துடித்திடும் குருடனுக்குத்
திடீரெனக் கண்ணிரண்டும்
ஒளிபெற்றால் எப்படியோ -

தேன்நிறைந்த பானை ஒன்று
தேன் எடுக்கத் தவம் இருந்த
முடவனுக்குக் கிடைத்து அதனை
அவன் குடித்து முடம் நீங்கி
நடக்கலுற்றால் எப்படியோ -

நெடுநாளாய்க் கடும்பசியால்
படுதுயரில் துவண்டவனின்
மிடி நீங்கப் பெருஞ்செல்வம்
கிடைக்குமெனில் எப்படியோ -

மணம் முடித்த சில நாளில்
கணவனை வன் சிங்களவர்
கொன்றுவிட்டார் எனக் கேட்டுக்
குன்றி விழுந்து அழுது அழுது
வாழ்விழந்த இளந் தலைவி
ஒருநாள் தன் உயிர்த் தலைவன்
வரக் காணின் எப்படியோ -

அப்படி நான் அம்மம்மா
எனைப்பெற்ற தாய் நாடாம்
தமிழீழம் தனை உலகம்
தனிநாடாய்க் கணிக்கையிலே!

# தெய்வமகன்

இவன் -
காலைக் கதிரவன் அல்லன் -
நள்ளிரவிலேயே உதித்துவிட்ட
நவீன சூரியன்!

இவன் தாகம்
தமிழீழத் தாயகம்!
இவன் வேள்வி
தமிழரின் புதுயுகம்!

முன்பு -
காகங்கள் இடைக்கிடை கரைந்தன:
நல்ல சேதி வரும் வரும் என நம்பிக்
காலந்தான் கரைந்தது!

தோற்றுப்போன காகித அரசியல்
ஆற்றல் மிக்க
ஆயுத அரசியலை ஈன்றது.
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க
இவன் உதித்தான் -
நெருப்போடு -
பொறுப்போடு!

கட்டு கச்சை தட்டு தோளை
வெட்டு ஒன்று துண்டு இரண்டு
என்று கொட்டுகிறது இவன் முரசு!

குனிந்தவர் நிமிர்ந்தார்
நிமிர்ந்தவர் விழித்தார்
விழித்தவர் திரண்டார்
திரண்டது புலிப்படை!

இவன் புலியா
அல்லது புலிதான் இவனா?
இவன் வீரனா
அல்லது வீரந்தான் இவனா?

இவன் துணிவு
என்னையும் இளைஞன் ஆக்குகின்றது!

இவன் -
இளைஞர் தலைவன்!
உலகத்துத் தலைவர்களிலே இளைஞன்!
அதனால் -
அதீத வேகம்!
தமிழரின் சோகம்
பொடிபடும் வேகம்!

தமிழர் தலைவன் -
தமிழினம் இதுவரை கண்டிராத
தனிப்பெரும் மன்னன்!

காட்டிலும் இருப்பான்
நாட்டிலும் இருப்பான்
பகைவர் -
வீட்டிலும் இருப்பான்!

எங்குதான் கற்றான் இந்த வியூகங்கள் -
கங்குலும் வியக்கும்
கரந்துறை மாயங்கள்!

இவன் -
புதிய சரித்திரம் வரைகின்றான்
வீர இரத்தத்தில்!
அதனால் -
தமிழர் தினமும் பூசிக்கின்றனர்
இவனைச் சித்தத்தில்!

ஆம் -
இத் தெய்வமகன்
மண்ணினை மீட்பான் -
மானத்தைக் காப்பான்!
விண்ணினை வளைத்தேனும்
விடுதலை கொடுப்பான்!
அது உறுதி! அதி உறுதி!

# வீர வணக்கம்

சின்னப் பிள்ளையாய்ப் பார்த்த ஞாபகம்!
மின்னற் சிரிப்பினால் வரவேற்று
இருக்கை தந்து
அப்பாவையோ அம்மாவையோ அழைக்கும்
கிளிப்பிள்ளை ஆர்வகம்!

வெட்டி எடுத்த வட்ட முகம்
கட்டவிழ் பூப்போலப் பொலிந்திருக்கும்!
பனித்துளிபோன்ற வார்த்தைகளில்
மதிப்பும் பண்பாடும் கலந்திருக்கும்!

அந்தப் பூவுக்குள்
செந்தளிர் மானுக்குள்
முற்றாத தயிருக்குள்
பற்றாத நெருப்பு ஒன்று
பதுங்கி இருந்ததை
யான் அறிந்ததில்லை!
யாரும் அறிந்திருக்கவில்லை!

மேஜர் துளசி குகபாலிகாவே,
உனக்குத் தலை வணங்குகிறோம்!

பல்கலைக் கழகம் செல்ல வேண்டிய நீ
பந்த பாசத்தைத் துறந்து,
உன்னை மறந்து உன் நாமம் கெட்டுத்
தலைப்பட்டாய்
தமிழீழ மண்ணை மீட்க!

எல்லோரும் உன்போலத்
தலைப்பட்டிருந்தால்
எல்லைக்குள்

கால் வைத்திருப்பாரா
பகைவர்?

இலட்சியப் பெண்ணே,
உன்னை எம் கண்கள்
குளிப்பாட்டுகின்றன.

ஈனப் பகைவர் சேனையை
ஈராக எண்ணிய ஏளனத்துடனே
மானப் போர் பல புரிந்து,
போராட்டத் தலைவர்
பிரபாகரனின்
பாராட்டுகளையும் பெற்றாய்!

பெரியமடு!
அதுவே உன் வீரத்துக்கு
உரியமடு என
அனுப்பி வைத்தார் தானைத் தலைவர்!

அது கொடுத்து வைத்தது!
உன் சாதனையைத்
தன்னுடன் பொறித்து வைத்தது!

மண் உன் இரத்தத்தை ஏந்த
விண் உன் இலட்சிய இதயத்தை ஏந்தியது!

நட்சத்திர நங்கையே,
மெய்சிலிர்க்க வைக்கிறது உன் துணிச்சல்!

பெண்களுக்கு என்ன வீரம் என்று
கண்களைச் சிமிட்டிய காலத்தை
உதைத்துவிட்டாய்!
அநீதி இழைத்த மன்னனை

அதட்டிக் கேட்ட கண்ணகியின் வீரத்தை
விதைத்துவிட்டாய்!
விட்டில் பூச்சிகள் எல்லாம்
வெளிநாடுகள் நோக்கிப் பறக்க -
சுட்டுப் பகை பொசுக்கித்
சுதந்திர வாழ்வுக்கு உயிரைக் கொடுத்த
தியாகச் சுடரே -
உன்னைப் பெற்றவர் உயர்ந்தவர்!

உன் தாய் “குறமகள்”
எழுத்தாற் பெற்ற புகழிலும்
நீ
வீரத்தால் பெற்ற புகழ்
உயர்ந்ததன்றோ?

சரித்திரப் பெண்ணே,
உனதும் உன்னோடு சென்ற
வீர வைரங்களினதும் சாதனைகள்
எங்கள் உணர்ச்சிகளில்
தீயை மூட்டிவிட்டன!

நெஞ்சங்களில்
வைராக்கியத்தை வளர்த்துவிட்டன!

தீராது எங்கள் தீவிரம் -
ஓயாது எங்கள் போராட்டம் -
எமதீழ எல்லைகள்
இமயச் சுவர்கள் ஆகும்வரை!

மாவீர மகளே,
வணக்கம்!
வீராதி வீர வணக்கம்!

# பெற்றவள் சிரிப்பு

பெற்ற வயிறு சிரிக்கிறது!
பிள்ளையின் ஆற்றலை வியக்கிறது!

அரசாங்கத்தின் -
இனத்துவேசத்துக்கும் பரிகாசத்துக்கும்
அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும்
கற்பழிப்புகளுக்கும் படுகொலைகளுக்கும்
மொத்தமான -
அட்டூழியங்களுக்கும் அநீதிகளுக்கும்
பெயர் -
சட்டம்!

பொறுத்துப் பொறுத்துச்
சிறுத்துச் சிறுத்து -
சனநாயகக் குரல்களும்
சத்தியாக்கிரகங்களும்
பேச்சுவார்த்தைகளும்
உடன்படிக்கைகளும்
மண்கவ்வ -
தமது மண்ணை மீட்கவும்
உரிமைகளை நிலைநாட்டவும்
ஒடுக்கப்பட்டோர் துவக்கை எடுத்தால்
அதற்குப் பெயர்
பயங்கரவாதம்!

அரசின் சட்டம் சிரிக்கிறது -
இதனை நான்தானே
பெற்றெடுத்தேன் என்று!

# அம்பாள் கருணை

தமிழரின் மானத்தைப்
பழித்துக்கொண்டும்
தாயகத்தின் வானத்தைக்
கிழித்துக்கொண்டும்
விமானங்கள்!

புத்தரின் சமயத்துக்கு
இது போன்று
எத்தனை எத்தனை
அவமானங்கள்!

அன்றைய தாக்குதலில்
சில்லி ஓடுகள்
ஆகின அதிக வீடுகள்!

அவனது வீடு
அருந்தப்பில் தப்பியது!

இன்றும் -
வஞ்சக விமானங்களால்
இரைந்தது வெளி வானம்!
தஞ்சக் கிடங்குகளை நோக்கி
விரைந்தது யாழ்ப்பாணம்!

குண்டுகள் விழுந்தன!
குடிமனைகள் அழிந்தன!

அவனின் அயலிலும்
அட்டூழியத்தின் பாதங்கள்!
ஆனாலும் -
அவனது வீட்டுக்கு
ஏதுமில்லைச் சேதங்கள்!

அருந்தப்பா?
அம்பாள் கருணையா?

குலதெய்வத்தைக்
கும்பிடவேண்டும்போல இருந்தது.

வீதிகளில்
விசர்நாய்கள் நிற்கலாம்!
அதனால் -
குச்சொழுங்கைகளும்
பற்றைப் பனந்தோப்புகளும்
குறுக்கு வழிகளும்
அம்பாள் கோயிலுக்கு
அவனை அழைத்துச் சென்றன!

“ஐயோ....!
அம்மாள் ஆச்சி! என்ரை தாயே!
உன் கோயிலுமா....?”

அவன் அலறினான்!
தலையில் ஓங்கி ஓங்கி
அடித்தபடி குளறினான்!

இடிந்து தரைமட்டமாகி
உடைந்த ஓடுகளுக்குள்
மறைந்து கிடந்தது மூலத்தானம்!
உள்ளமும் உடலும்
குலுங்கக் குலுங்க அழுதான்!
ஓங்கி அடித்த கைகளை
உச்சியில் வைத்துத் தொழுதான்!

தன்னை மறந்தான்!

இராணுவ வாகனம் இரைந்தது -

இரண்டு தடவைகள் சூடு வாங்கியது -
சுருண்டு விழுந்தது -
எதையுமே அறியாமல்
இந்த அநியாய
உலகத்தைத் துறந்தான்!

# வளரும் மீண்டும் குரும்பைநகர்!

1.

எங்கள் குரும்பை நன்னகரம்
எல்லா ஊர்க்கும் எழிற்சிகரம்!

உழைப்பால் கிடைத்த தனி உயரம் -
உழையாப் படைக்கு மனத் துயரம்!

மூண்டது மெல்ல இனத் துவேசம்
ஆண்டது வல்ல அட்ட காசம்!

பூந்தோட்டத்தில் குரங்குகள்!
பூசை அறையில் கரடிகள்!
நாடக அரங்கில் நரிகள்1
வீடுகள் எங்கும் படைகள்!

தமிழீழத்தில் முதல் விழுந்த
தலையான கிராமம் குரும்பைநகர்!
இட்டது முற்றுக்கை இராணுவம்
சுட்டது பீரங்கி ஆணவம்!
வெளியேற்றுஞ் சூழ்ச்சி பலசெய்தார்
விளையாட்டாய் உயிர்கள் சில கொய்தார்!

மாட்டோம் என்று மறுத்திடலாம்
மறுத்துத் துவண்டு மடிந்திடலாம்
மடிந்து கெடுதல் - ·
கொடுமையிலும் வாழத் துணிதல் -
எது வீரம்?

விடையைச் சூழக் கொடும் படைகள் -
இடையில் எதுவும் செல்லாது!

காக்கும் அரசே தன்குடியைத்
தாக்க வருமா வன்மை கண்டு
கருணை கண்ணை இழந்துநிற்க
மனிதாபிமானம் பேச்சிழக்க
நியாயம் செவிகள் கெட்டுவிழ

நீதி மூச்சை இழந்தது அந்தோ!
உயிரின் மேலாம் ஊரைவிட்டு
உடலை மட்டும் சுமந்துகொண்டு
செயலில் வல்லார் செயலிழந்து
பிறந்த பதியைத் துறந்து சென்றார்!

பயந்த படையினர் துணிவுற்றார்!
வெற்றி மாலைகள் அணிந்து ஆர்த்தார்!
மதிற் சுவர்களை இடித்தார்கள்!
மாளிகை மனைகளை எடுத்தார்கள்!
ஆடுகள் கோழிகள் பிடித்தார்கள் -
அவற்றுடன் கள்ளினைக் குடித்தார்கள்!

அட்டூழியத்துக்கு அளவில்லை -
ஒட்டிநின் றேவிய குண்டுகளால்
விள்ளிய பழைமைப் புகழுடைய
பள்ளியின் ஓடுகள் பறந்தெழுந்து
பக்கத்து ஊர்களைக் கீறிட்டன!

நல்லார் தீயார் மற்றுள்ள
எல்லா உயிர்க்கும் தாய் யாவும்
அறியும் சக்தி செறிந் தெங்கும்
நிறையும் எங்கள் முத்துமாரி
அம்மனின் அழகிய கோயிலையும்
அந்தோ சிறியார் சிதைத்து விட்டார்!

சிகரம் விழுந்து சிதறிடினும்
உயரம் குறைந்து போகவில்லை!
மண்ணின் படங்களைச் சிதைத்துவிட்டால்
விண்ணில் வரைந்தவை வீழ்ந்திடுமா?

சூழ்ந்த சோகக் கங்குலையும்
கிழித்துத் துலங்கி அவையாவும் -
மதியாய் நட்சத் திரங்களாய்
விதியை வெல்லும் சரங்களாய் -
சுற்றிச் சுற்றி வந்துநிதம்
பற்றி எரியும் வயிற்றினிலே
பாலை வார்த்துப் பார்க்கின்றன!

2.

படிக்க முடியாக் காலத்திலே
பள்ளிக் கூடம் நடத்தியவர் -
புத்தகம் இல்லாக் காலத்திலே
புத்தகம் போல விளங்கியவர் -
சீராய்க் கல்விப் பயிர் ஓங்கி
ஊரில் வளர உழைத்த குரு -
திரு. பொன் பரமானந்தர் புகழ்
தெருப் பூனைகளால் சிதைவுறுமோ?

புத்தகப் பதிப்பில் கலையாடி
பத்திரிகைத் துறை முன்னோடி
பிறந்த பதியின் பெயர்பாடி
தமிழுல கத்துப் புகழ்சூடி
ஈழகேசரிப் பொன்னையர்தம்
இணையில் எச்சங்கள் எவர் அழிப்பார்?

எங்கள் நாடு எங்கள் நூல்
எங்கள் எழுத்தாளர் என்றே
எங்கும் முழங்கிய இரசிகமணி
நற்போக் கிலக்கியச் சிரோன்மணி
கனக செந்திநாதன் பணி
காலத்தை வென்ற கனகமணி!

இவர்கள் வழியில் பல மணிகள்
குரும்பை மகளின் தனி அணிகள்
பண்டிதர் வ. நடராசா
வெற்றிமணி சுப்பிர மணியம்
ஓவியக் கலைஞர் செல்லையா
கலாகேசரி தம்பித்துரை
கலைப்பேரரசு பொன்னுத்துரை
கவிஞர் வ. இளையதம்பி
வர்த்தக வள்ளல் நடராசா
வன்னியசிங்கம், வயித்திலிங்கம்
புகைப்படக் கலைஞர் குகதாசன்
தொல்பொருள் திரட்டும் கலைஞானி

ஆவணம் பேணும் கனகரத்தினம்
காவடிக் கலைஞர் இந்துதாசன்
நாடகத் துறையில் -
அ. சிவதாசன்
க. கோபிநாத்
க. சிவதாசன்
சி. நடராசா
இ. இராசரத்தினம்
க. கந்தசாமி
ஒப்பனைக் கலைஞர் இராசரத்தினம்

சிறுகதைத் துறையில் -
மு.க.சு. சிவகுமாரன்
ஆசிரியர் எஸ். சுப்பிரமணியம்
வேல் அமுதன்
மு. திருநாவுக்கரசு
அ. பார்த்திபன்
ஐ. ஜெகதீஸ்வரன்

என்றே நீளும் பட்டியலில் -
எங்கள் ஊரின் அட்டியலில்
எவன்தான் கையை வைத்திடுவான்?

3.

குரும்பசிட்டியின் விருத்தியிலே
பெரும் பங்கு ஆற்றிய பேரமைப்பு -
பன்முகச் சேவை பல புரிந்த
சன்மார்க்க சபையின் பொன் எழுத்தை -

எழுச்சி மிக்க இளைஞர்களின்
வளர்ச்சிக் குழைத்த அதிவேக
உதய தாரகை மன்றத்தின்
இதய தாகத் தீபத்தினை -

ஏற்றத் தாழ்வு பாராது
எளியார் வாழ்வை முன்னேற்றி
மாற்றம் புரிந்த வளர்மதிபேர்
சமூக நிலைய அறுவடையை -

பாரதி மற்றும் கலைவாணி
சனசமுக நிலையங்களின்
பேர்புகழ் கருதா முற்போக்குச்
சீர்திருத்தச் சேவைகளை -

ஐக்கிய நாணய சங்கத்தின்
தக்கநற் பணிகள் - கூட்டுறவுச்
சங்கம் ஈட்டிய சாதனைகள் -
கொழும்பில் இயங்கிய குரும்பசிட்டி
நலன்புரி சங்கத் தொண்டு -
இவற்றை -

எவரும் சிதைக்க முடியாது -
இனத்துவேசப் படையினரும்
கவர்ந்து செல்ல முடியாத
கற்பகக் கதைகள் - மண்ணுடனே
கலந்த வரலாற்றுப் பசளை!

வளம் மிகுந்த பசளையிலே
வளரும் மீண்டும் குரும்பைநகர்!

4.

பெறுவோம் நாளை தமிழீழம்
உறுதி உறுதி அப்பொழுது
குரும்பை நகரப் பொன்வயலில்
விரும்பிய யாவும் விளைவித்தே
தமிழீழத்தை வளம் செய்வோம்!

கவலை வேண்டாம் விடு மனமே

காக்கும் சித்தி விநாயகரும்
கருணை முத்து மாரியும் அங்கு
இன்னும் இருக்கின்றார் அறிவாய்!

தெய்வம் நின்றே கொல்லும் எனும்
பொய்யில் வாக்கை நம்பிடுவோம்!

போற்றி சித்தி விநாயகர் தாள்!
போற்றி முத்து மாரியின் தாள்!

வாழ்க நாங்கள் பிறந்தபதி!
வாழ்க எங்கள் தமிழீழம்!

# கொடுமை

இதயம் பதைக்கிறது!
இரத்தம் கொதிக்கிறது!
சத்தியாக்கிரகப் பசுவும்
கத்தியைத் தூக்கத் துடிக்கிறது!

ஆதிகாலக் காட்டு மிராண்டிகூட
இப்படி ஒரு
பாதகத்தைச் செய்திருக்க மாட்டான்!

அப்பாவி மக்களைச்
செம்மணியிற் புதைத்த பழி
அட்டூழிய இராணுவத்திற்கு
ஒரு நாள்
தப்பாது தோண்டும் குழி!

## உதவாத கை!

கண்டவற்றுக்கு எல்லாம்
கையை -
கட்டுவதும்
ஏந்துவதும்
நீட்டுவதும்
ஓங்குவதும்
கூடாதுதான்!

ஆனால் -

தலையிலே கூடுகட்டி -
குஞ்சு பொரித்ததும் போதாதென்று
தலையையே கொத்திப் புண்ணாக்கும்
காகத்தை துரத்த
ஓங்காத கை
ஒட்டி இருந்தாலும் என்ன?
ஒட்ட முறிந்தாலும் என்ன?

# தன் கையே தனக்கு உதவி

சித்திரமும் கைப்பழக்கம் என்பார்கள்
எப்பழக்கமும் இல்லாத எனக்குக்
கைகொடுத்து உதவினார்
அந்தக் கைத்தொழில் முதலாளி.

கைகூசக் கையேந்தி
கைச்செலவுக்கு வாங்கிய
கடன்களை எல்லாம்
கைக்கூலியால் அடைக்கலாம்
என்னும் நம்பிக்கையில்
கைவீசி நடந்தேன்!

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!
கைநொடியில் அது நடந்துவிட்டது!

கைத்தொழிற்சாலையில்
கடைந்த பொருளைக் கைமாறுகையில்
கைப்பதற்றத்தில்
கைதவறி உடைந்துவிட்டது.
அதைத்தொடர்ந்து
கைகோத்துத் திரிந்தவனும்
கைநீட்டி அடித்தான்.
என்னை அறியாமலே
என் கையும் ஓங்கியது.
கைகலப்புக் கைம்மீறுமுன்
முதலாளி கண்டுவிட்டார்.

விசாரணை நடந்தது
என் கை தாழ்ந்தது.

கைத்திறம் இல்லாதவன்
காயாலாகாதவன்
என்றெல்லாம் குற்றம் சாட்டி
முதலாளி என்னைக்
கைகழுவி விட்டார்!

கையோடு அவருடைய
கையாளைப் போய்க் கண்டேன்.
அவனும்
கைவிரித்துவிட்டான்.

கைப்பிடித்தவளும்
கதை கேட்டுக்
கைகொட்டிச் சிரிப்பாளோ,
கையறம் பாடுவாளோ
கடவுளுக்குத்தான் தெரியும்!

கைக்கொண்ட வேலையெல்லாம்
கைபிசையும் கட்டத்தில் முடிவது
என் கைராசியாகிவிட்டது!

என் அருமைக் கையே,
நீ என்னைக் கைவிட்டாலும்
நான் உன்னைக் கைவிடமாட்டேன்!

ஏனென்றால் -
உன்னிலும் சிறந்த
கையாள் எனக்கு
வேறு எவரும் இல்லை!
என்றைக்குமே இருக்க முடியாது!

என்னை ஒருநாளைக்கு நீ
கைதூக்கி விடுவாய்!
அப்பொழுது -
என் முயற்சிகள் யாவும்
கைகூடும்!

# எங்ஙனம் மலரும் இலக்கியங்கள்?

பாடுபட்டு எழுதிய
பயனுள்ள புத்தகங்கள்
கடைகளில்
தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

வீடு தேடிச் சென்று நீட்டினால்
முகங்கள் கறுக்கின்றன!
வெளிக் காட்டவே மறுக்கின்றன!

வெறுப்புக்கும் மறுப்புக்கும்
உள்ளுடனாக இருக்கும்
"உவருக்கு ஏன் உந்த வேலை?"
"நாங்கள் எழுதச் சொன்னனாங்களே?"
"எங்களுக்கு உதுகளை வாசிக்க எங்கை
நேரம்?"
முதலிய கண்ணிகள் வெடிக்கின்றன!

இரசனையே இல்லாதவர் மத்தியில்
இலக்கியத்தை வளர்ப்பது எவ்வாறு?

தாம் எழுதும் நூல்களைத்
தாமே பிரசுரித்து,
தாமே விற்பனை செய்ய முயன்று,
நட்டப்பட்டு நலிவுறும்
எழுத்தாளர்களை
எட்டியும் பாராத சமுதாயத்தில்
எங்ஙனம் பிறக்கும் ஆக்கங்கள்?

இலவசமாகச் சுவாசிக்கும் பழக்கத்தில்
எதையும் இலவசமாகவே பெற்றுச்
சீவிக்க விழையும் எம்மவர்க்கு
காசுக்குப் புத்தகங்களை வாங்கி
வாசிக்கும் பழக்கம் வருவது எவ்வாறு?

தமிழீழத்தைக்கூட
இலவசமாக எதிர்பார்க்கும்
இவர்கள் உலகத்தில்
எங்ஙனம் மலரும் இலக்கியங்கள்?

தமிழ் வளர்ந்தால் என்ன
வளராமற் போனால் என்ன
தமிழீழம் வந்தால் என்ன
வராமற் போனால் என்ன
எவர் சிறுமைப்படுத்தினால் என்ன
யார் சிதறிச் சிதைந்தால் என்ன
தாங்கள் மட்டும் தப்பிப் பிழைக்கச்
சூழ்ச்சி செய்யும்
சுயநலத் தமிழர் மட்டத்தில்
கலைநயத் தமிழை வளர்ப்பது எவ்வாறு?

ஈழத்தமிழர் இலக்கியத்தில்
நோபல் பரிசு பெற்றாலும்
இந்தத் தமிழர்க்கு இரசனைவர
ஊழிக்காலம் வந்துவிடும்!

# காட்டுப் பூ நாட்டுப் பூவாக ...

மரங்கள் செடிகள் கொடிகள்
நிறைந்த அடர் காட்டில்
நான் பிறந்தது
கொடியாக.

மழைநீர் அளவுக்குக் கிடைத்தாலும்
கதிரவன் கதிர்களைப் பெறுவது
கடினமாக இருந்தது.

எப்படியோ
எட்டி எட்டி ஊன்றி எழுந்து
கிட்ட நின்ற ஒரு மரத்தைப்
பற்றிப் படர்ந்து வளர்ந்து
பல பூக்களைப் பூத்தேன்.

பூக்களின் வாசனையால்
ஐந்தாறு தேனீக்களைக் கவர்ந்தேன்.
மகரந்தங்களை மாந்தி
அவர்கள் பாடிய சங்கீதங்கள்
என் திறமைக்குக் கிடைத்த சான்றிதழ்கள்!

அவர்களுக்கு அப்பால்
எனது பூக்களின் மகிமையை
அறிவார் யாரும் இல்லை!

வருவாரும் இல்லை!.
பறிப்பாரும் இல்லை!
முகந்து பார்ப்பாரும் இல்லை!

என் வாசனை
இந்தக் காட்டுக்குள்ளேயே
முடங்க வேண்டுமா?

என் படைப்புகளுக்கு
வேண்டும்
விமர்சகர்கள்!
விற்பனையாளர்கள்!

## நெடில் நடை

மனம் -
பெருமைப்பட்டுப்
புகழுக்காகப் பெற்றெடுப்பது
மானம்.

தனம் -
அதிகப்பட்டு
ஆடம்பரத்துக்குப் போர்க்கும் பொன்னாடை
தானம்.

மது -
கூடக் கூடக்
குதூகலித்துக் கூடத் துடிப்பது
மாது.

பதி -
ஆணும் பெண்ணும்
சரிசமம் என்பதை நாட்டக் கொடுத்தது
பாதி.

குடை -
உதவி உதவிக்
கிழிந்தபின் பெறும் பரிசு குப்பைக்
கூடை.

இனம் -
குட்டக் குட்டக்
கூனிக் கும்பிடும் வாழ்கையால் பெறுவது
ஈனம்

கொடி -
ஏற்றி வணங்கும்
சுதந்திர நாட்டுக்கு வழங்கும் சுகங்கள்
கோடி.

படை -
குடிகளுக்குப் பாதுகாப்பு
வழங்க முடியாத நாட்டுக்கு எங்கே என்றிருக்கும்
பாடை.

# ஆற்றாமை

காற்று -
சுழன்று எழுந்தது -
ஊர் கழன்று விழுந்தது!

வானம் -
பிளந்து சொரிந்தது -
மாநிலம் ஒன்று -
மூச்சுத் திணறிக் கரைந்தது!

தீ -
காட்டினை எரித்துத் தின்றது -
உயிரினங்களை
கூட்டோடு வதைத்துக் கொன்றது!

புவி -
சிறிது நடுங்கிற்று -
ஆயிரம் ஆயிரம் உயிர்களை
அநியாயமாகப் பிடுங்கிற்று!

இவன் -
அவதானமாகவே செலுத்தினான் வண்டியை -
தானாக ஓடிவந்து குழந்தை ஒன்று
மோதி விழுந்தது!
வழக்கு -
விசாரணை -
குற்றச்சாட்டு -
சிறைச்சாலை!

காற்றும் வானமும்
தீயும் நிலமும்
சிரிக்கின்றன -
மனிதனின் ஆற்றாமையை எண்ணி!

# ஏங்கும் கண்கள்

முற்பக்கம் -

ஏற்றத் தாழ்வு -
தற்பெருமை -
படாடோபம் -
பதவி ஆசை -
குடைபிடித்தல் -
அடிவருடல் -

சுயநலத்தின் அலங்கோலங்கள்!
- கண்கள் சுருங்குகின்றன!

பிற்பக்கம் -

போட்டி பொறாமை -
வஞ்சகம் சூழ்ச்சி -
அவாவின் தாச்சி -
நேர்மையின் வீழ்ச்சி -
ஊழல்களின் ஆட்சி -

பொய்ம்மையின் உல்லாசக் காட்சிகள்!
- கண்கள் மூடுகின்றன!

வலப்பக்கம் -

சாதிச் சண்டை -
மதச் சண்டை -
விலைவாசி ஏற்றம் -
வேலையின்மை -
வறுமைக் கொடுமை -
நோய்கள் -
மருத்துவ வசதியின்மை -
கல்வி வசதியின்மை -

ஆட்சியின் பலவீனங்கள்!
- கண்கள் கலங்குகின்றன!

இடப்பக்கம் -

அடக்குமுறை -
தீவிரவாதம் -
மிரட்டல் -
வெட்டுக் குத்து -
துவக்குச் சூடு -
குண்டு வீச்சுக்கள் -
கண்ணி வெடிகள் -
தீ வைப்பு -
துடிக்கும் அப்பாவி உயிர்கள் -

பயங்கரவாத்தின் கொடூரங்கள்!
- கண்கள் சிவக்கின்றன!

கீழ்ப்பக்கம் -

கள்ளக் கடத்தல் -
இலஞ்சம் -
போதைப் பொருட்கள் -
மயக்க வெறி -
நிர்வாணம் -
பாலியல் வன்முறை -
எயிட்ஸ் நோய் -

கட்டுப்பாடற்ற வாழ்க்கை விநோதங்கள்!
- கண்கள் கூசுகின்றன!

மேற்பக்கம் -

கண்டு பிடிப்புகள் -
கைத்தொழிற் புரட்சி -

கணினி வளர்ச்சி -
தொடர்புச் சாதனங்கள் -

செயற்கைக் கோள்கள் -
விண்வெளி ஆய்வுகள் -

மனித சக்தியின் சாதனைகள்!
- கண்கள் அகல்கின்றன!

எப்பக்கம் -

அன்பு -
பண்பாடு -
மனிதாபிமானம் -
மனித உரிமை -
சமத்துவம் -

நிறைந்த உலக அமைதி?
- கண்கள் ஏங்குகின்றன!

# யார் பிழை?

காற்றைக் கடன்வாங்கி
கானகீதம் இசைத்து
கற்களையும் அசைத்து
கண்ணன் கையில் தவழும்
கதியைப் பெற்றது புல்லாங்குழல்!

நீரைக் கடன்பட்டு
நீண்ட தூரம் காவிச் சென்று
நிர்வாண நிலத்துக்குப் பருத்தித் துணியாகி
எகிப்திய நாகரிகத்தை
உலகுக்கு நன்கொடைசெய்த
கற்பக தரு என்னும் புகழுடன்
பொற்புற விளங்குகின்றது நைல் நதி!

வெட்கம் சிறிதும் இல்லாது
சொற்களைக் கடன் வாங்கி
தொல் மொழிகளை
நட்சத்திரங்களாக்கிச்
சூரியனைப் போல வலம் வருகின்றது
ஆங்கில மொழி!

ஒளியை இரவலாகப் பெற்று
இரவைப் பகலாக்கி
கவிஞர்களை இயக்கி
காதலர்களை மயக்கி
தேன் நிலவு சொரிந்து
சிரித்து விளையாடுகிறது சந்திரன்!

நான் ஒருவன்தான்
காசைக் கடன்பட்டுக்
கடை ஒன்று போட்டு
கடன் கொடுத்து
பேயாய் அலைந்து
நாயாய் யாசிக்கின்றேன்!

யார் பிழை?
யோசிக்கின்றேன்!

## அறிவு

நூல்கள் பல கற்றேன்
நுட்பங்களை நுகர்ந்தேன்
பட்டங்கள் பெற்றேன்
பதவிகள் வகுத்தேன்
உலகை வலம் வந்தேன்
இயற்கைச் செழிப்பை நயந்தேன்
மனித சாதனைகளை வியந்தேன்!

அவ்வப்போது -
மேடைகள்
பொன்னாடைகள்
மலர் மாலைகள்
சொல் மாலைகள்!

பேரான வாழ்க்கையில்
பேரன் ஒருமுறை சொன்னான் -
“தாத்தா உங்கடை முதுகிலே
ஒரு தேமல் படருது!”

“தேமல் என்ன,
இத்தனை வருடங்களாகியும்
என்னையே
உன் தாத்தாவுக்குச்
சரியாகத் தெரியாது பார்!”
என்று சொல்லி
உடல் குலுங்கச் சிரித்தது
என் முதுகு!

# காதல் வாசனை

உன்னை -

பார்த்தும் தழையவில்லை
கேட்டும் குழையவில்லை
நினைந்தும் உருகவில்லை
வரைந்தும் பருகவில்லை!

ஆனால் -
மணந்து பழகலுற்றேன்
மணந்து காதலித்தேன்
மணந்து அனுபவித்தேன்!

அதனால் -
நீ எங்கிருந்தாலும்
மணந்து அறிந்துகொள்வேன்!

உன் வாசனை
உன்னைக் கணமும் சுவாசிக்கும்
எனக்குத்தானே தெரியும்!

# காதல் வியாதி

இருட்டில் ஒரு வெளிச்சம்!

அவள் -
என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்
நிலவாக!
மேகங்களுக்கு மனம் பொறுக்கவில்லை -
வேலியிட்டன!

நான் அசையவில்லை!

எனது உறுதியைக்கண்டு
மேகங்கள் கலைந்த வேளை
சூரியன் உதித்தது.

இருட்டில் தெரிந்தவள்
வெளிச்சத்தில் மறைந்து போனாள்!

நான் அசையவில்லை!

அசையாத என்னை
அசைத்துக் கொண்டு வந்து
விட்டிருக்கிறார்கள்
இந்த -
பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்!

காதல் வியாதிக்குப் பெயர்
பைத்தியம் என்றால்
உண்மைக் காதலை
உணர முடியாதவரின் வியாதிக்கு
என்ன பெயர்?

# இவள் -

என் இதயத்தை ஆள்பவள் -
அன்னத்தைவிட அழகாக நடப்பவள் -
குயிலே நாணும் குரலை உடையவள் -
உலகத்து அழகிகளை எல்லாம்
தோற்கடிக்க வல்லவள்!

இவள் -
கற்பனைப் பெண் அல்லள் -
கனவுக் கன்னி அல்லள் -
அடைய முடியாத
கொம்புத் தேனும் அல்லள்!

இவள் -
என் பாதியாய் -
உயிராய் -
என் இருட்டு வாழ்வுக்கு
வெளிச்சம் ஏற்றிக்கொண்டிருக்கும்
குருட்டுப் பெண் -

என் மனைவி.

## தலைக் கூடல்

தலைவன்
தலைப்பட்டான்!
தலைவி
தலைதடுமாறினாள்!
தலைகுனிந்தாள்!

அவளின் அழகு
அவனைத் தலைகுலையச் செய்தது!

தலைமறைவாக நின்று
அவளின் அழகில்
தலைமயங்குதல் அவனின்
தலையாய இன்பமாயிற்று!

அவளும் அவனையே நினைத்துத்
தலைவாரத் தொடங்கினாள்!

தலைபோனாலும்
உன்னைத் தவிக்கவிடேன் என்று
தலையில் அடித்துச்
சத்தியம் செய்தான்!

அவளும் தலைமயங்கினாள்!

சில நாட்கள்
அவள் தலைகாட்டாதபோது
அவனுக்குத் தலைசுற்றத் தொடங்கியது!

எப்படியும்
அவளைக் காணவேண்டும் என்று
தலைகீழாய் நின்றான்!
தலைப்பட்டான்!
தலைதெறிக்க ஓடினான்!

தலைவியின்
வீட்டுக்கே போய்ப் பெண் கேட்டான்!

திருமணம் நடந்தது!
தலைக்கூடல் நிகழ்ந்தது!

அவள் இப்பொழுது
தலைமுழுகாமல் இருக்கின்றாள்!

அவன் -
தலைகால் தெரியாமல்
குதித்து விழுந்து
கால் முறிந்து கிடக்கின்றான்!

அவள் -
தலைப்பிரியாது
அவன் கால்மாட்டில்
பக்திப் பாடல் படிக்கின்றாள்!

# தலையே நீ வணங்காய்!

இப்படி அருளியவர்
அப்பர் சுவாமிகள்!

அவர் சொன்னது -
எல்லாம் வல்ல,
எல்லாம் அறிந்த,
எங்கும் இருக்கின்ற,
எல்லா உயிர்களையும்
படைத்துக் காக்கின்ற
பரம் பொருளை -
கடவுளை
வணங்கு என்று!

தலையே,

நீ போய்
ஒரு தறுதலையை,
தலைக்கனம் உள்ளவனை,
பிறர் அலுவல்களில் அநாவசியமாகத்
தலையிடுகின்றவனை,
தலைமறைவாக
ஊழல்கள் புரிபவனை,
தலைமைப் பீடத்துக்குச் சும்மா
தலையாட்டுபவனை,
தலையான தொண்டர்களைக்கூடத்
தலையெடுக்க விடாது
தடுப்பவனை,
தலைதடவிக் கெடுப்பவனை,
தலைதடுமாற்றக் கதைகள் கதைப்பவனை,
தனது தலைவியையே
தலைமுழுகியவனை -

தலைவன் என்று வலம்வந்து
வணங்குகின்றாயே -

உனக்குள் ஏதேனும் இருக்கிறதா?

# பரஸ்பர விளக்கம்

பூவின் மணத்தை வண்டறியும்
வண்டின் குணத்தைப்
பூ அறியாது!

தேனின் பயனை ஈ அறியும்
ஈயின் இயல்பை
தேன் அறியாது!

கறியின் சுவையை நா அறியும்
நாவின் நலத்தைக்
கறி அறியாது!

மழையின் வரவை மயில் அறியும்
மயில் நடனத்தை
மழை அறியாது!

பசுமைப் புல்லைப் பசு அறியும்
பசுவின் பாலைப்
புல் அறியாது!

மண்ணின் வளத்தை உழவன் அறிவான்
உழவன் உயர்வை
மண் அறியாது!

மரத்தின் தரத்தைத் தச்சன் அறிவான்
தச்சன் திறத்தை
மரம் அறியாது!

மடயர் இயல்பை அறிஞர் உணர்வார்
அறிஞர் சிறப்பை
மடயர் அறியார்!

## பால்

பெற்று வளர்த்தது
தாய்ப்பால்.

பள்ளியிலே
கற்றுத் தெரிந்தது
ஐந்துவகைப் பால்.

அவற்றில் ஒன்று
பலவின்பால்.

பசுக்கள் பலவின்பால்.

பாற் பண்ணை நடத்திப்
பசுப் பாலைப்
பலர்பால் விற்று
நான் தேடிக்கொண்டது
பொருட்பால்.

பொருட்பாலில் பூத்துப் பொலிந்தது
இன்பத்துப்பால்!

அது
அறத்துப்பாலில் ஒன்றாகிய
இல்லறத்தில் இருக்கச் செய்தது!

இல்லறத்தை
நடத்திவரும் காலத்தில் -

என்பால்
எனது மனைவி காட்டிய
அன்பால்
பிறந்த குழந்தைகள்
செய்த குறும்பால்
செழித்தது பாசப்பால்!

வரவர
எல்லாப் பால்வகைகளும்
ஆவியாகி மேல் எழுந்து
மற்றுமொரு பாலைப் பெய்வதற்குக்
கருக்கட்டுகின்றன -

அதுதான்
ஞானப்பால்!

# பணம் இருந்தும் பயனில்லை!

வருமானம் குறைச்சல்தான்!
என்றாலும்
வாட்டமில்லை!
ஒருநாளும்
எவரிடமும் உப்பேனும் கேட்டதில்லை.

எப்படித்தான்
குடித்தாலும் வெறித்தாலும்
பெண்சாதி எப்பொழுதும்
“என்ரை ராசா”
என்றுதான் கூப்பிடுவாள்!
எப்பொழுதும்
என்னுடன் சேர்ந்துதான்
சாப்பிடுவாள்!

என்வீட்டில்
சிரிப்புக்குக் குறைச்சல் இல்லை!

ஆனால் -

முன்வீட்டு
முதலாளி குடும்பத்தை நினைச்சாலோ....
பாவமாய்க் கிடக்கு!

கையில் காசு பணம் இருந்தும்
கண்ட பயன் ஒன்றுமில்லை?

நாய்பூனை சண்டைதான் -
நாளாந்தம்!

# கடைசிக்கால விண்ணப்பம்!

விடு விடு எங்களை விடு!
போசாமல் உந்தக் கட்டிலிலே படு!

மனமே,

இதுவரை காலமும்
நீ சொன்னதையெல்லாம்
எடுத்தெறியாது
கேட்டு நடந்தோம்!

சின்னப் பருவத்திலே
நீ பண்ணிய கூத்துக்களுக்கெல்லாம்
உடந்தையாக இருந்தோம்!

அதற்காக உன் தகப்பனாரிடம்
எத்தனை தடவை
அடி வாங்கியிருக்கிறோம்?

அண்டை வீட்டுப் பெடியனை
உதைத்தமைக்காகச்
சண்டையே மூண்டதே!
ஞாபகம் இருக்கா?

மாங்காய் மரத்தால் சறுக்கியும்
மாரிச் சேற்றில் வழுக்கியும்
வாங்கில் குதித்துத் தவறியும்
கம்பி வேலியில் தடக்கியும்
கட்டாந் தரையில் மோதியும்
எங்களை மாறி மாறிக்
காயப்படுத்தி
ஒட்டகப் புலத்து எண்ணெயிலே
எத்தனை முறைதான் ஊறவைத்தாய்!

அதையெல்லாம் பொருட்படுத்தாமல்
பள்ளிக்கூடத்திலே பலவித

விளையாட்டுப் போட்டிகளில்
உன்னை வெற்றிபெற வைத்தோம்!

உத்தியோகம் பார்த்த காலத்திலே
சைக்கிளிலே
நீ சுகமாகப் போய்வருவதற்காக
எங்களை நோக வைத்தாய்!

சில சந்தர்ப்பங்களில்
போகக்கூடாத இடங்களுக்குக்கூடப்
போகவைத்தாய்!

அந்த இரகசியங்கள்
இரகசியங்களாகவே இருக்கட்டும்!

எந்தக் காலத்திலும்
நீ கீறிய கோட்டை
நாங்கள் தாண்டியது கிடையாது.

இப்பொழுது -
உனது சொல்லைத்
தட்டவேண்டிய கட்டம் வந்துவிட்டது -
எங்களால்
உன்னைத் தாங்கமுடியவில்லை!

காரணமும் உனக்குத் தெரியும்.

நீ இன்னமும்
இளமை குன்றாது இருக்கின்றாய்!
உனக்கு இன்னும்
எத்தனையோ எண்ணங்கள்!
எங்களுக்கு இல்லவே இல்லை
இளமை வண்ணங்கள்!

அதனால்,
உனது தாளத்துக்கு
எம்மால் இனிமேல்
நடனம் ஆட முடியாது!

மன்னித்துக்கொள்.

நில்!
எதற்காக எழும்புகிறாய்?
ஊன்றுகோலை எடுக்காதே!
தாண்டித் தடக்கி நடக்காதே!

எண்ணிப்பார்!
எத்தனை வருடங்கள்.....?
ஆம் -
தொண்ணூறு வருடங்களாக
நீ தலையால் இட்டவற்றை
செய்துவந்தோம் தவறாது!
நீ இப்பொழுது செய்வதோ அவதூறு
உன் நன்றியுணர்வு இருந்தவாறு!

ஆ! அப்பப்பா! உம்ம்ம்.....!
வா! திரும்பி வா!
கட்டிலுக்கு வா!
படு படு!
ஆய்க்கினைப்படுத்தாதே!
கடைசி காலத்திலாவது
எங்களைக் கொஞ்சம்
ஓய்வெடுக்க விடு!

# சிரிப்பு நடிகர் பேசுகிறார்!

என்னைக் கண்டதும் எல்லோர்க்கும் சிரிப்பு
வந்ததைக் காண எனக்குப் பூரிப்பு!
எனக்குக் கிடைத்த இந்த வரவேற்பு
இணையில் சிவப்புக் கம்பள விரிப்பு!

மற்றைய உயிர்களுக் கில்லாத சிரிப்பு
மனித குலத்தின் தனிப்பெருஞ் சிறப்பு!

உலகத்துப் பூக்களில் உயர்வான தனிப்பூ
உள்ளக் களிப்புக் கொழிக்கும் சிரிப்பு!

சிரிப்பால் வருவது முகச்செந் தளிப்பு!
எவரையும் கவரும் மின்சார ஈர்ப்பு!
உள்ளப் பூரிப்பு உடல்மதா ளிப்பு!
எந்தத் தொழிலிலும் ஓர்சுறு சுறுப்பு!

சிரிப்பால் கரைந்து போவது கொழுப்பு
செத்து மடியும் வேற்றுமை வெறுப்பு
தீரும் வேலையைத் தடுக்கும் அலுப்பு
சிரிப்பு நோய்களை விரட்டும் துடுப்பு!

சிரிக்கின்ற போதும் வேண்டும் பொறுப்பு
அளவற்ற சிரிப்பு அறிவீனக் குறிப்பு!

சிரிக்கக் கூடா தவற்றின் சிரிப்புச்
சிரிப்பே யல்ல! அது பரி கசிப்பு!

விடுப்பு நடிப்பு நையாண்டிச் சிரிப்பு
சிரிப்பவர்க் கில்லை வாழ்க்கையில் செழிப்பு!

சிரித்துக் கொண்டே வாழ்ந்தால் சிறப்பு
சிரிப்புக் கிடமாய் நடந்தால் பழிப்பு!

## வாய்

அன்றெல்லாம் -

கிளி வாய், குயில் வாய்
வருவாய், தருவாய்
பனிவாய், கனிவாய்
என்றெல்லாம்
வாய்ப்பாட்டுப் பாடி -
வாய்க்காலோரம்
வலம் வந்தவரின்
வாய்ப்பேச்சில் மயங்கி
வாயூறி -
வாய் முத்தம் சிந்தி
வாய்விட்டுப் பேசிக்
கழுத்தையும் கொடுத்தேன்!

இன்றெல்லாம் -

வாய் காட்டாதே
வாய் பொத்து
வாய்க்காரி
என்றெல்லாம்
வாய்க்கு வந்தபடி திட்டி -
என்னையொரு
வாயில்லாப் பிராணிபோல
நடத்துகிறார் -
எனக்கு வாய்த்தவர்!

வங்காளம் என்ன
கோடுவரை போய்விட்டேன்!

நாளை -

வாய்க்கொழுப்பு
எனக்கா அவருக்கா
என்பதைத் தீர்மானிக்கப் போகிறது
நீதி மன்றம்!

# மடயன்!

என்ன!
என்னையா மடயன் என்கிறாய்?

அடடா!
இவ்வளவு காலமும்
உன்னை அறியாது
இருந்து விட்டேனே!

நான் மடயனேதான்!

தெரியவில்லை வழிவகை
என்று என்னைத் தேடி நீ வந்த பொழுது
நான் ஒரு வழிகாட்டி!

புரியவில்லை இவை இவை
என்று நீ விளக்கங்கள் கேட்ட வேளைகளில்
நான் ஒரு புத்திசாலி!

கவலையோடு வந்து நீ
கடனுதவி பெற்ற காலங்களில் எல்லாம்
நான் ஒரு கருணை வள்ளல்!

ஆசீர்வாதம் வேண்டிக்
காலில் விழுந்தாயே,
அப்பொழுது
நான் ஒரு மாசற்ற சான்றோன்!

இப்பொழுது....
நான் உனக்கு மடயன்!

இது உன் மை!
உண்மை!
நீ முன்புபோல் இல்லை!
வளர்ந்துவிட்டாய்!

நான்
இருந்தபடியே இருக்கின்றேன்!

# நாயிலும் கடையர்!

நாய்க்கு வயிற்றுக் கோளாறு -
ஓங்காளிக்க வேண்டும்!

ஒதுக்கமான இடத்தை நோக்கி
ஓடிச் சென்று
கக்க வேண்டியதைக் கக்கி -
மண்ணால் மூடி
மறைத்துவிட்டுச் செல்கிறது
ஆற!

கயவனுக்கு வயிற்றெரிச்சல் --
வஞ்சம் தீர்க்க வேண்டும்!

கக்கித் தள்ளுகிறான் கட்டுக் கதைகளை!

எல்லோரும் பார்க்க வேண்டும் என்னும்
பொல்லாத ஆசையால்
பொது இடங்களில்

வைக்கின்றான்
தனது கக்கலை
நாற!

# வேகத்தில் எழும்பும் தூசிகள்!

நிலத்து மணல்
குதிரைகள் ஓடுகையில்
சிதறிப் பரவும்!

தெருவோரக் கஞ்சல்
வாகனங்களின் வேகத்தில்
எழுந்து பறக்கும்!

எனது குறிக்கோளை
நோக்கி நான் ஓடுகையிலும்
தூசிகள் பறக்கின்றன
பின்னாலே!

எனது வேகத்தில்
எரிச்சல் பொறாமைகளைத்
திரும்பிப் பார்க்க
நேரம் கிடைப்பதில்லை!

முன்னால் -
சிலபேர் பாராட்டுகிறார்கள்!
முயற்சியின் அருமை
அறிந்தவர்கள் அவர்கள்!

பின்னால்
எழும் தூசிகள்
சுய முயற்சி இல்லாதவை!
காற்றுக்கு எழும்புபவை -
அது
படுக்கப் படுப்பவை!

காற்று
அவைபற்றிக்
கவலைப் படுவதில்லை!
நானும்
கவனங் கொள்வதில்லை!

போற்றுவார் போற்றுவதாலும்
தூற்றுவார் தூற்றுவதாலும்
எனது வேகம் தணிவதில்லை!

எனது முயற்சி வாகனம்
முன்னேறிக் கொண்டேயிருக்கிறது!

# கோபக்காரர்

ஒரு சிறு கொட்டுக்குள்
வெடிக்கிறது பூகம்பம்!

இரத்தம் கொதிக்கிறது!
மூச்சுப் பதறுகிறது!
நரம்புகள் புடைக்கின்றன!
உள்ளம் படபடக்கின்றது!
கண்கள் சிவக்கின்றன!
உதடுகள் துடிக்கின்றன!
கைகள் நடுங்குகின்றன!

நா தடுமாறுக்கின்றது!
தமிழ் கொடுமையாகின்றது!
கதிரை கவிழ்கிறது!
கோப்பைகள் பறக்கின்றன!
கண்ணாடிகள் சிதறுகின்றன!

கோபம்!
கோபமோ கோபம்!

இவ்விதம்
அடிக்கடி வருகிறதா
இந்தச் சாபம்?

பாவம்!

கோபக்காரருக்குப்
பல வருத்தங்கள்
காத்திருக்கின்றன!

# சமயம் மாறிய சாமியாரே!

சாமியாரே,
உங்கள் சமயத்துக்கு
என்னை மாற்ற வேண்டுமாயின்
உங்கள் சமயத்தையல்லவா
போற்ற வேண்டும்!
எனது சமயத்தை ஏன்
தூற்ற வேண்டும்?

தயவுசெய்து
எந்தன் சமயத்தைப் பழியாதீர்கள்!
எந்தச் சமயத்தவருக்கும்
தீங்கு இழையாதீர்கள்!

சமயம் என்பது
மனத்து அழுக்குகளைச்
செதுக்கிச் சுத்தமாக்கும் பெரும்
உளி!
அதற்கு -
கடவுளை ஆதாரமாக்கும் ஒரு வழி!

கடவுள் ஒன்று, சாமியார்,
வழிகள் பல!

எல்லா வழிகளும் மனிதருக்கு
நல்வழி காட்டும் விழிகளே!

சமயங்கள்
ஒன்றோடொன்று மோதிய காலம்
வெம்பி விழுந்துவிட்டது!
அதனைத் தொடர்ந்து -
ஒன்றையொன்று மதிக்கும் காலம்
நம்பிக் கொழுந்துவிட்டது!

நீங்கள் முன்பு
எந்தன் சமயத்தில் இருந்தது

உங்கள் பேச்சிலிருந்து புரிந்தது.
ஆனால்,
அதில் உங்களுக்கு நம்பிக்கை
இருக்கவிலை என்பதும் தெரிந்தது!

இல்லாத காரணத்தாலேயே
வேறு சமயத்துக்கு மாறினீர்கள்!
சாமியாராகவும் தேறினீர்கள்!

நல்லது.
அது உங்கள் சுதந்திரம்!
மரத்துக்கு மரம் தாவும்
குரங்குந் தந்திரம்!

சொல்லுங்கள் -
உங்கள் மனைவியைவிட்டு
வேறு ஒரு பெண்ணுக்கு
எப்பொழுது தாவப் போகிறீர்கள்?

தாவமாட்டீர்கள்!
ஏனென்றால்,
உங்கள் மனைவியை நீங்கள்
நன்றாகவே அறிந்திருக்கிறீர்கள்!

நன்றாக அறிந்து பழகிய ஒருவரை
விட்டுப் பிரிய மனம் வராது,
அல்லவா?

பிறந்த சமயத்தைப் பற்றி
நன்றாக அறியாதபடியால்
அதனை விட்டீர்கள்!
சிறந்த சமயம் என்று
வேறு ஒன்றைத் தொட்டீர்கள்!

தொட்டதைத்தானும் நீங்கள் சரியாகக்
கற்றுப் பார்க்கவில்லை!

உண்மைச் சமயிகள்
மற்றவர் நம்பிக்கையில்
குற்றம் பார்ப்பதில்லை!

எனது சமயம் ஒரு பலாப் பழம்.
அறியாமையால் -
முட்டுப்படும் முள்ளைப் பற்றியும்
ஒட்டுப்படும் பாலைப் பற்றியும்
தட்டுப்படும் பொச்சபைப் பற்றியும்
மலங்கிக்கொண்டிருக்கிறீர்கள்!

நான் சுளையை
உண்ட சுவையில்
இலங்கிக்கொண்டிருக்கிறேன்!

போங்கள்
வராதீர்கள்!
நீங்கள் போதகரல்லர்!
மற்றவர்
சுதந்திரத்தை -
சிந்தனையை -
நம்பிக்கையை -
மதிக்கத் தெரியாத
பாதகர்!

# விசித்திரம்!

1.
அழகான பெண்
முழுதான உடையில்
எளிதான நடையில்
வருவது பவித்திரம்!

அவள் -
ஆடையைக் குறைத்து
இடையை,
மார்பினை, தொடையை -
காட்சிக்கு வைத்து
தளுக்கிக் குலுக்கிப்
போவது விசித்திரம்!

2.
ஆணும் பெண்ணும்
ஒருவரையொருவர்
நாடுதலும் கூடுதலும்
குழந்தைகுட்டிகளைப் பெறுதலும்
இயற்கையின் சித்திரம்!

ஆணும் ஆணும்
பெண்ணும் பெண்ணும்
பாலுறவு வாழ்க்கை நடத்துவது
கலியுகத்தின் விசித்திரம்!

3.
அன்னை தெரேசா
ஏழைகளை வாழ்விக்கக்
கட்டி எழுப்பியது
நம்பிக்கைச் சத்திரம்!

இந்திய அரசாங்கம்
இன்னமும்
ஏழைகளை உருவாக்கிக் கொண்டிருப்பது
விந்தையான விசித்திரம்!

4.

வீராதி வீரர் பிரபாகரன்
தமிழீழ மக்களுக்குச்
சுதந்திர சுகத்தை வழங்க
வரைந்து கொண்டிருப்பது
தன்மானச் சரித்திரம்!

எந்தத் தமிழ் இனமும் கண்டிராத
இந்தச் சரித்திரத்தில்
பங்குகொள்ளாது
தமிழீழத் தாயகத்தைவிட்டுத்
தமிழர் வெளியேறிக்கொண்டிருப்பது
விசித்திராதி விசித்திரம்!

# கவலை

மலையிலிருந்து ஊற்றெடுக்கும் ஆறு!

இவளுக்கும் -
தலையிலிருந்து பாயத் தொடங்கியது
சஞ்சலம்!

பள்ளம் நோக்கும் வெள்ளம்போல
உள்ளம் நிரம்பி வளிந்தது கவலை!

இனத்துவேச இராணுவத்தால்
கணவனை இழந்தாளா?
பெற்ற பிள்ளைகளைப் பறிகொடுத்தாளா?
உடன்பிறப்புக்கள் உயிர்துறந்தனரா?
உடைமைகள் அழிந்தனவா?

இல்லை!
இல்லவே இல்லை!

உள்ள வீடு வாசலையும்
நல்லவிலைக்கு விற்றுவிட்டுக்
கள்ளமாகக் கனடாவுக்குக்
குடும்பத்தோடு
குறையேதும் இல்லாமல்
வந்து சேர்ந்த மகாலட்சுமி -

தலையில்
நாலைந்து
மயிர்கள்
நரைத்துவிட்டதற்காக
அழுகிறாள்!

# அழகு

சிலருக்கு முகத்தில் அழகு.
சிலருக்கு அகத்தில் அழகு.

அகத்தின் அழகு
முகத்தையும் அழகாக்கும்!
முகத்தின் அழகு
முனிவரையும் பழுதாக்கும்!

உள்ளத் தூய்மை உயர்ந்தது
அந்த உயர்வுக்கு
வானமும் இல்லை எல்லை!
அது உள்ளவர்க்குத்
தொல்லை இல்லை!

உலகத்து அழகை நயக்க
உள்ளத்தில் அழகு வேண்டும்!
உள்ளத்தில் அழகு பூத்தால்
உலகிலும்
அழகு பூக்கும்!

அமைதி வீசும்!

# துமிகள்

"தடாகத்தை அசுத்தப் படுத்தாதீர்!"
அடிமரத்தில் -
அறிவித்தற் பலகை!
நுனிமரத்தில் -
சட்டவிரோதப் பறவைகள்!

என்னைத் தாங்கும் நிலமே!
மன்னித்துக்கொள் -
உன்னை -
காலால் மிதிப்பதற்கு!

ஒவ்வொரு செடியிலும்
ஒவ்வொரு பூ!
என்னவளிலும் ஒரு பூ -
அன்பூ!

தன்னைக் காட்டிக்கொள்ளாது
என்னை
வாழ்விக்கிறது -
வளி.

சாக்கடையில்
பூக்கடைகள் வந்தபின்
குடிபெயர்ந்தன
இலையான்கள்!

குதிக்காலைத் துடைக்கத் துடிக்கும்
கூந்தல் சொல்கிறது:
"உயரத்தில் இருந்தாலும்
தாழ்ந்தவர்களை மறக்காதே!"

மழை
கொட்டுகிறது!
தவளை
திட்டுகிறது!

❁

நோபல் பரிசா?
அகிம்சா மூர்த்தி மகாத்மா
காந்திக்கு
வழங்கப்படாத பரிசு
எனக்கா?
தூ!

❁

அடி
வெட்டப்பட்டும்
முடி
விழாமல் இருக்கிறது!

❁

வெளிச்சத்தில்
தொலைந்துபோன
உண்மைகள்
இருட்டில் தெரிகின்றன!

❁

ஈயாதான் இறந்துவிட்டான்!
கவலை இல்லை
"இலை" யான்களுக்கு!

❁

முடிமட்டச் சுமையை
அவள்
இறக்கியதும்
அது -
அடிமட்டமாகிவிட்டது!

❁

மரங்கள் பழுத்துவிட்டன -
ஆயினும்
வவ்வால்கள்
வருவதாக இல்லை!

காட்டுப் பூவுக்கு
ஓர் எட்டப்பன் -
அதன் வாசனை!

மல்லிகை
வைத்த விருந்துக்கு
எல்லோரும் வந்திருந்தார்கள்
இலையானைத் தவிர.

தென்றல்
கொஞ்சக் கொஞ்ச -
தன்னை -
கொஞ்சம் கொஞ்சமாக -
இழக்கின்றது
பூ!

பிடிப்பால்
நாரியை
அடிக்கடி பிடித்தான்!
வந்தது
நாரிப் பிடிப்பு!

தண்ணீரில்
வாழும் மீன்களுக்கு -
கண்ணீர் இல்லை!
கண்ணீரில்
வாழும் ஏழைகளுக்கு -
தண்ணீர் இல்லை!

இவனுக்கு விருப்பு -
அவளுக்கு வெறுப்பு!
விருப்புக்கும் வெறுப்புக்கும்
முடிச்சுப்போடும் சக்தி
தனக்குத்தான் உண்டு என்கிறது
காதல்!

காதல் மென்மையானது!
அதில் -
சந்கேத்துக்கும்
வாக்குவாதத்துக்கும்
அடிபிடிக்கும்
அழுகைக்கும்
தற்கொலைக்கும்
இடமே இல்லை!

கண்ணழகி
என்றவனைக் கைவிடு!
கருத்தழகி
என்றவனைக் காதலி!

உனக்கு -
என்னைப்பற்றி
நினைவில்லை!
எனக்கு -
நீ காட்சியளிக்காத
கனவில்லை!

நிலவே வா
என்று அழைக்கமாட்டேன்!
அது வந்து விழுந்தால்
நான்
பிழைக்கமாட்டேன்!

நான் -
பல போட்டிகளில்
பங்குபற்றியிருக்கின்றேன்.
எனினும் -
எதிலுமே வெற்றிபெறவில்லை
- இப்படிக்கு,
நேர்மையானவன்.

அடைபட்டேன் -
விடுபட்டேன் -
குண்டுகளுக்குத் தப்பினேன் -
துவக்குகளையும் ஏமாற்றினேன் -
என்றாலும் -
இந்தப் புகைப் பழக்கத்திலிருந்து
என்னை -
விடுவிக்க முடியவில்லை!

மரத்தைச் சுட்டு -
கரி எடுக்க முடியாதவன்
மயிரை எரித்து -
சாம்பல் அள்ளுவானா?

மண்ணீரம்
அடக்கு முறையால்
அல்லற்படுபவர்களின்
கண்ணீரால்
ஆவியாகின்றது!

அன்று -
இணைபிரியாது இருக்கப்
பிரிந்தான் பொருள்தேடி!
இன்று -

பொருள்தேட வந்த இடத்தில்
பிரியாதிருக்க இணைந்தான்!

❁

தொடவேண்டும் என்றில்லை -
நீ பார்த்த அளவிலேயே
இந்தப் பூ
சுருங்கிவிடுகிறது -
அறிவாயா?

❁

சாத்திரம் சொல்ல
எனக்குத் தெரியாது
ஆனால் -
நீ
என்ன நினைக்கிறாய்
என்ன செய்கிறாய்
என்பதெல்லாம்
சொல்லத் தெரியும்.

❁

இருந்தபோது தூற்றியவர்கள்
இறந்தபோது போற்றுகிறார்கள்
அவர்களுக்கு
அவ்வளவு மகிழ்ச்சி!

❁

சிலபேரின் மொழிபெயர்ப்பில்
சொற்கள் பிதுங்கும்!
அதனைப் படிக்கையில்
தமிழ்வாணர் விழிகள் பிதுங்கும்!

❁

எதையும் அடைத்து வையாதே!
வைத்திருந்தால்!
திறந்துவிடு வெளியே!
அது திரும்பிவந்தால்

ஏற்றுக்கொள்!
இல்லையென்றால் உன்மனத்தைத்
தேற்றிக்கொள்!

அழகில்லாத எனக்கு
அழகாக வந்து பிறந்திருக்கிறாய்!
உயிரைக் கொடுத்தேனும்
உன்னை வளர்ப்பேன் -
வறுமை
என்னைப் பசியாறாமல் இருந்தால்!

உலகம் உயரம் பாய
அன்னை தெரேசா
நீளம் பாய்ந்தார்!
மென்மலர்ப் பாதங்கள்
பாரதத்தில் பதிந்தன!
அனாதைகளின் அல்லல்கள்
அருந்தொண்டால் சிதைந்தன!

பனிக்கட்டிப் பளிங்கே!
என் காதல் வெப்பம்
உன்னை ஒரு நாளைக்கு
உருகச் செய்யும் -
அப்பொழுது
எமக்குப் பிறக்கும் வசந்தம்!

## ஊர்மண் உரம்!

எங்கும் வெளிச்சம்!
இவன் மட்டும்
இன்னும் இருட்டில்!

இவனுக்கு என்ன நடந்தது?

மொட்டுகள் மலர்ந்து
வண்டுகள் அலைந்து
தேன் சுவையுடன்
வீடுகளுக்குத்
திரும்பத் தொடங்கியுள்ளன.
பறவைகளின் பாடல்களைக் கேட்டவாறு
பசுக்கள் ,மேய்கின்றன.

உலகம் எழுந்து சுறுசுறுப்பில் இயங்க
இவன் மட்டும்
சுருண்டு படுத்துக்கொண்டிருக்கிறான்!

இவனுக்கு என்ன நடந்தது?

மரத்தாலே விழுந்தானா?
மாடேறி மிதித்ததா?
சண்டை பிடித்தானா?
சதி ஏதும் செய்தானா?
குடும்பத் தொல்லையா?
இடும்பைச் சோகமா?
குட்டுப்பட்டானா?
நட்டப்பட்டானா?
ஒடுக்கப்பட்டானா?
உயிருக்கு ஆபத்தா?

ஒன்றுமில்லை -

இவன் இன்னும் எழுந்திருக்கவில்லை!

இராத்திரி இழுத்து மூடிய போர்வையை
உதறித் தள்ளாதவரை
பொழுதின் புலர்வை
இவன் உணரப்போவதில்லை!

இன்னும் எத்தனை நாட்களுக்குப்
பொதுநலப்படி
இவன் சோம்பலை
வளர்க்கப்போகின்றது?

ஒன்றுமட்டும் தெரிகிறது:
இவன் -
அயராத ஊக்கத்து
நயினா தீவில் பிறக்கவிலல்லை
என்பது நிச்சயம்!

# வீடு

கணவன்
என்ற அசுரனுடன்
வாழ்ந்த தொடர்கதையைச்
சிறுகதையாக்கினாள்!

ஒளி தெரிந்தது
ஓடிப் போனாள்!

வழியில் -

'என் வீட்டுக்கு வா' என்றார் தந்தை.
'என் வீட்டுக்கு வா' என்றான் தமயன்.
'என் விட்டுக்கு வா' என்றான் தம்பி.

அவளோ -

எல்லா வீடுகளிலும்
மேலான வீடுடையவனைச்
சென்றடைய -
பூண்டாள்
தவக்கோலம்!

# குறுக்கே வந்த தெய்வம்

"கும்பிடுவதென்றால்
கடவுளையே கும்பிடுங்கள்!
கொடுப்பதென்றால்
கோயிலுக்கே கொடுங்கள்!"

பெரியவர் பேச்சில்
உருகிய அடியவர்
கும்பிடவும் கொடுப்பதற்கும்
சென்றார்
கோயிலுக்கு!

வழியில் -
கையை நீட்டியது
வழியில்லாத
குழந்தை ஒன்று!

கொண்டுபோன தொகையைக்
குழந்தை கையில் வைத்துக்
கும்பிட்டார் அடியவர்!

"ஐயா முருகையா" என்று
அடியவர் அடிகளில்
விழுந்தனர்
குழந்தையின் பெற்றோர்!

# சீவன் முத்தர்

முத்தன் இருந்தாற்போல்
பித்துப் பிடித்தவன்போல்
கத்தத் தொடங்கினான்!

குத்தி முறியாதே -
கத்திக் குளறாதே -
புத்தி திரியாதே -
பித்தனைப் பார் -
முத்தனைப் பார் -
என்றெல்லாம்
அர்த்தமில்லாமல்
அலறத்தொடங்கினான்!

பித்தம்
தலைக்கேறிவிட்டதென்று
பெற்றோர் அவனுக்கு
வைத்தியம் செய்தனர்!

வைத்தியருக்கு
சுத்த வைத்தியம்
மத்திமம் என்று
முத்தன் முத்திரை குத்தினான்!

வைத்தியர் முத்தனுக்குப்
பைத்தியம் என்றார்!

இப்படியே
மற்றவருக்கு முத்தனும்
முத்தனுக்கு மற்றவரும்
பைத்தியமாகத் தெரிந்தனர்!

கடைசியில்
பைத்திய உலகைச்
சித்தம் தெளிந்த
முத்தன்
முற்றாகத் துறந்தான்!

தன்னை மற்றவர்களுக்குப்
பைத்தியமாகக் காட்டும்
பைத்தியனில்
பத்தி வைத்துச்
சிவன்கோயில் வாசலில்
பத்து மாதங்கள்
பத்தியம் இருந்தான்!

முத்தன் இப்பொழுது
சித்திகள் பெற்ற
சீவன் முத்தனாகச்
சும்மா இருக்கின்றான்!

# முத்திக்கு ஏற்ற முழு ஆன்மா

அறிவு கொலுவிருக்கும்
அடக்கம் நிலவெறிக்கும்
பண்பு கனிந்திருக்கும்
பழகச் சுவைத்திழுக்கும்
ஒழுக்கம் உயர்ந்திருக்கும்
விழுப்பம் மிகுந்திருக்கும்.

எழுத்தில் தமிழ் உணர்வு
பழுத்துக் கனிந்திருக்கும்.

தமிழர் குருசேத்திரக்
கீதை மேதையிடம் -
எவ்வளவோ எதிர்பார்த்தோம்
அவ்வளவும் மண்ணாமோ?

பொங்கிவரும் வேளையிலே
புதுப் பானை உடைந்ததுவோ?
எங்கும் மணம் பரப்ப
எழுந்த முல்லை விழுந்ததுவோ?
பல பழங்கள் தரவிருந்த
பலா மரமும் பட்டதுவோ?

என்னையா பிழை செய்தோம்?
மன்னவனே! மதிவலவ!
சிந்தனைச் சிற்பி!
சித்திராமணாளா!
சிந்தை கவர்ந்த சிறந்தநல் நண்பா!
உந்தன் மனம் நோக
ஊறென்ன செய்துவிட்டோம்?

ஏமாற்றி விட்டாயே!
"தாமார்க்கும் குடியல்லாச் சங்கரனைச்"
சென்றடைய
ஏன் இந்த அவசரம்?

அரியவுன் கீதையால்
இருவினையும் கெட்டு
முத்திக்கு ஏற்ற
முழு ஆன்மாவாயினையோ?

தூங்கு!
நிர்மலனின் திருநிழலில் தூங்கு!
நிகரற்ற சாந்தியிலே நீந்து!

இறுதியாக அந்த மேடையிலே நீ
உறுதியோடு சிந்திய வார்த்தைகள் -
எங்கள் உள்ளங்களில்
என்றென்றும் இருந்து
உன்னை அர்ச்சிக்கும்
உலகெங்கும்
உன்புகழைக் கர்ச்சிக்கும்!

# ஆன்ம சிந்தனை

எண்ணத்தை
அவர்களுக்கு எழுதினேன்
கடிதத்தில் -
எனக்குத் தெரிந்த
வடிவத்தில்.

ஒருவர்
உலக தானத்தில்
மற்றையவர்
சுடலை ஞானத்தில்
அடுத்தவர்
தெய்வீக வானத்தில்.

மூன்று ஆன்மாக்களும்
வருகிறார்கள்
சந்திக்க
ஆயத்தமாகுங்கள்
சிந்திக்க!

## ஒவ்வொரு நாளும் உயிர்ப்பாய்!

வானத்து நெற்றி
வட்டநிலாப் பொட்டை
இழந்துவிட்டது!

கொட்டிப் பொழிந்த கவிமுகில்
கோடை வெயிலில் ஆவியாகிவிட்டது!

நிலாவரையின் அலாவுதீன்
தென்மராட்சியின் அடிகொடித்தேன்
கனடியத் தமிழரின் கலைத்துவக் கண்மணி
அகாலத்தைக் காலமாக்கிவிட்டான்!

நிலாவே, குகப்பிரியாவே
அக்கினிக்குஞ்சே, திரிலோகசஞ்சாரியே
ஆசானே,

ஏன் இந்த அவசரம்?

மற்றவர் கண்ணீரைக் கண்டு எழுவாய்
இப்பொழுது
எங்கள் கண்ணீரைக் கண்டும்
உறங்குவது தகுமா?

நல்லாரோடு இணங்கியிந்த நண்பனே
இன்னுயிரோடு இருந்தபோதே
இன்னொரு நாளில் உயிர்ப்பேன் என்றாய்!

ஒருநாளில் மட்டுமா உயிர்ப்பாய்?

உன் படைப்புகளில் -
உன் மனிதாபிமானத்தில் -
நீ கடைப்பிடித்த ஒப்பற்ற ஒழுக்கத்தில் -
நேர்மையில் நியாயத்தில்
பொறுமையில் கடமையில் பொறுப்புணர்வில் -
நீ உயிர்த்துக்கொண்டே இருப்பாய்
ஒரு நாளல்ல
ஒவ்வொரு நாளும்!

# உறங்கலும் விழிப்பும்

சௌந்தரராஜன் -

95 முதல்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
- கனடாக் கிளையின்
நிரந்தரராஜன்!

உதவிச் செயலாளர் -
உண்மைச் செயல்வீரராகப் பரிணமித்த
அருஞ்செயல் ராஜன்!

எத்திசையும் போற்ற
96ல் நடந்த
6வது மாநாட்டின் வெற்றிக்கு
நித்திரையின்றி உழைத்தவர்
அந்தோ
நித்திரையாகிவிட்டார்!

அதிகம் பேசாத ஆளுமை -
யாரையும் நோகவைக்காத தோழமை
பொறுப்புக்கு மேல் பொறுப்பு -
செய்வதைச் செவ்வனே செய்ய வேண்டும்
என்னும் பெரு விருப்பு
நோயுற்று இருந்தபோதும்கூட
ஊக்கத்துக்கும் உழைப்புக்கும்
என்றைக்கும் இருந்ததில்லை
முற்றுந்தரிப்பு!

பிரச்சினைகள் எங்கு இல்லை?
அவற்றை எதிர்கொள்ளச்
சிரிப்பாரே ஒரு சிரிப்பு!
அத்தகைய வேளைகளில் -
சௌந்தரராஜன்
ஒரு மந்திரராஜன்!

உண்மையாகவே
அவர் ஒரு பண்பாளர்!
தமிழர் பண்பாட்டை
உளமார நேசித்தவர் - சுவாசித்தவர்!
ஆங்கிலச் சூறாவளியில்
அள்ளுண்டு போகாமல்
தமிழர் தமிழராகவே வாழவேண்டும் -
தமிழ்ப் பண்பாடு தமிழரை மட்டுமன்றி
உலகத்தவரையே உயர்த்த வல்லது -
என்றெல்லாம் நம்பியவர் -
நம்பித் தொண்டாற்றியவர்!

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
சிறகிழந்து விட்டது!

நாம் -
நல்லொரு தமிழரை
செந்தமிழ்ராஜனை
இழந்துவிட்டோம்!

இனிய நண்பனே!
இணையற்ற தொண்டனே!
கரவு வஞ்சகம் இல்லாத
தூய நெஞ்சனே!
பெருமைக்குரியவனே!
தூங்கு!

உன் தூக்கத்தால்
நாம் விழிப்படைந்து விட்டோம் -
உன்னைப்போல் ஒரு நல்லவனை
தேடிக் கண்டுபிடிப்பதற்காக!

---

(திரு. அந்தோனிப்பிள்ளை சௌந்தரராஜன் அவர்களின் மறைவு குறித்து உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் - கனடாக் கிளை நண்பர்கள் அஞ்சலி செலுத்தியபோது வாசிக்கப் பெற்றது.)

# இமயம் சரியாது!

நடிகர் திலகமே!
நாடக வேந்தனே!
நடிப்பின் இலக்கணமே!
பத்ம பூஷணமே!

தமிழ் உலகை மறந்து
கலையுலகைத் துறந்து
சென்றுவிட்டாயோ!

சிவலோகத்தில்
நடிக்கப்போகும்
பாத்திரத்தோடு
ஒன்றிவிட்டாயோ?

எந்தப் பாத்திரத்தைத் தாங்கினாலும்
சொந்தப் பாத்திரம் ஆக்குவாயே!
எதுதான் உனக்குப் பொருந்தாது?
எல்லாம் எமக்கு விருந்தாகும்!

நடிப்பிலே பிறந்தாய்
நடிப்பதற்கே பிறந்தாய்
நடிப்பிலே வளர்ந்தாய்
நடிப்பையும் வளர்த்தாய்
நடிப்பால் -
தமிழையும்
தமிழ் மரபையும்
பண்பாட்டையும்
சமயத்தையும்
வளர்த்தாய்!

பிறவி நடிகன் என்பவன்
யார் என்பதை
உன்னைப் பார்த்தே
தெரிந்து கொண்டோம்!

தமிழின் இனிமையை
நீ பேசும் தமிழைக் கேட்டுத்தான்
புரிந்து கொண்டோம்!

உன் நடையைக் கண்டுதான்
ஏறுநடை என்றால் என்ன என்று
அறிந்து கொண்டோம்!
செயற்கை நடிப்பு
இயற்கை நடிப்பு
என்னும் அடிமட்டங்களால்
உன்னை அளக்க முயன்றார்கள்!

நீயோ -
அவற்றுக்கு எல்லாம் அப்பால் ஓங்கி
“இது சிவாஜி நடிப்பு”
என்ற தனித்துவ பாணியை
நிலைநாட்டி நின்றாய்!

பராசக்தி, பாசமலர்
பாலும் பழமும், பாகப் பிரிவினை
பலே பாண்டியா, படிக்காத மேதை
என்ற பானாக்கள்தாம் உனக்குப்
பரிசு தந்தவையல்ல -
மனோகரா, அமரதீபம்
ரங்கூன் ராதா, கர்ணன்
முதல் மரியாதை, தேவர் மகன்
திருமால்பெருமை, திருவிளையாடல்
திருவருட்செலவர், சரவஸ்வதி சபதம்
கந்தன் கருணை
என்று
எந்தப் படத்தை எடுத்தாலும்
விந்தை நடிப்பால்
எம் சிந்தை கவர்ந்த
கதைதானே தொடர்கிறது?

ஐயனே!
மன்னன் சிவாஜி
கட்டப்பொம்மன், கப்பலோட்டிய தமிழன்
அசோகச் சக்கரவர்த்தி, பாரதியார்

சோக்கிரட்டீஸ் போன்றவர்களை
உயிர்ப்பித்த உன்னை
உயிர்ப்பிக்க இன்று எவரும் இல்லை!

எவரஸ்ட் உச்சியை ஏறிப்பார்த்தாலும்
எவரஸ்ட்டாக மாற முடியாது!

இமயம் உலகத்திலே ஒன்றுதான்
உனது உயர்ச்சியிலும் உலகத்திலே
வேறொன்று இல்லை!

இமயம் சரியாது!
உன்புகழ் சாயாது!

# அன்னை தெரேசா

கோடி கோடியாகக்
கொட்டிச் செலவழிக்கின்றன
உயரப் பறக்கும் பணக்கார நாடுகள் -
விண்வெளி ஆய்வுக்கும்
வியாழனில் இறங்குவதற்கும்!

வறுமையிலே பிறந்து
வாடி வதங்கித்
தலையெடுக்க முடியாது
தாழ்ந்து தவிக்கும்
கோடானுகோடி
மக்களை
இந்நாடுகள்
இன்னும்
கண்டுகொள்ளவும் இல்லை
அன்னை தெரேசாவின்
தொண்டின் சிகரத்தை
அடைய
முயலவும் இல்லை!

# சொந்தப் பொங்கல்

முற்றமில்லை -
மண்பானை சட்டி இல்லை
புத்தடுப்பு, விறகு, கோலம்
என்பனவும் தேவையில்லை!

மின் அடுப்பு, சீனச்சட்டி
ஈயப் பானை, பிளாஸ்டிக் பாத்திரங்கள்
- இவைதாம் இருக்கே!
குற்றமில்லை!

புத்தரிசி, பாசிப் பயறு -
இவற்றையும் உரலில் இட்டுக்
குற்றி எடுக்க வேண்டிய
சிரமமும் இல்லை -
கடைகளில் வாங்கலாம்
கல்லுகளை மட்டும்
கவனமாகப் பொறுக்கி எடுத்தால் சரி!

முந்திரிகை வற்றல், பருப்புவகை,
பால் - பிரச்சனை இல்லை!

சரி, சூரியன்?
இந்தக் குளிரில் அவனையாவது
காண்பதாவது!

இருப்பினும் -
பொங்குகின்றேன்!
என் இரத்தத்தில் ஊறியுள்ள
மரபை
பொங்குகின்றேன்!

எப்பொங்கலை மறந்தாலும்
தைப்பொங்கலை மறக்க முடியுமா?
அதனாலே -
இந்தக் குளிரிலும்

சொந்தப் பொங்கல்
பொங்குகின்றேன்!

ஊக்கம் வேர்விட
உழைப்புகள் தளிர்க்க
ஆக்கங்கள் பூக்க
அமைதி நிலைக்க
சூரியனுக்குப் பொங்குகின்றேன்!

சூழ்நிலை மாறினாலும்
என் உணர்ச்சியில்
மாற்றம் இல்லை!
பொங்கல் இனிமையிலும்
மாற்றம் இல்லை!

அந்த இனிமையில் -
என் இனத்தவர்களையன்றி
உலகத்தவர் அனைவரையும்
வாழ்த்துகின்றேன்!

உயர்திணைகளையன்றி
அஃறிணைகளையும்
வாழ்த்துகின்றேன்!

# வித்தார்ப்பு!

மத்தாப்பு -
தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்து
இளைஞர்களின் கலைவண்ண
வித்தார்ப்பு.

ஆண்டாண்டு தோறும் அனைவரையும் கவரும்
புத்தீர்ப்பு.

விலா எலும்பும் மகிழ்ச்சியால் விம்மும்
கலைக் கோப்பு!

வகைவகையாம் சிந்தனைகள்
முகையாகி மொட்டாகி மேடைக்கு
வரும் பூப்பு.

கொடிப்பூ கோட்டுப்பூ நிலப்பூ நீர்ப்பூ -
ஆ! ஒரே இடத்தில் வெவ்வேறு பூக்களா?
இது தமிழ் மக்களுக்கு
அரும் வாய்ப்பு.

தேனீக்கள் படையெடுக்கும்
சோலை மலர்களை நோக்கி!
உடற் களைப்பினைப் போக்கத்
தொழிலாளர் செல்வார்கள்
நிலா வெளியினை நோக்கி!
மனச் சுமைகளை இறக்க
பக்தர்கள் விரைவார்கள்
இறைவன் சந்நிதானங்களை நோக்கி!
இரசித்து மகிழ்ந்து செழித்துப் பூரிக்கக்
கலாரசிகர்கள் திரள்வார்கள்
மத்தாப்பை நோக்கி!

மத்தாப்பு -
சிறப்புடன் நடைபெற
எனது வாழ்த்தைக் கூறிக்
கட்டுகிறேன் நாண் காப்பு!

# ஹைக்கூக் கவிதைகள்

1. ஒற்றுமை

வேப்ப மரத்தில்
மாங்குயில் அமர்ந்து
தேன் பொழிகின்றது.

2. சமாதானம்

புயற் காற்றோடு
போட்டி போடுகின்றன
மூங்கிற் குழல்கள்.

3. உணர்ச்சிவசம்

வெடிச் சத்தங்கள்
விடியத்தான் எண்ண முடிந்தது
வீழ்ந்த பிணங்களை.

4. ஆர்வம்

தெரு விளக்குப்
பாடம் படிக்கின்றது
ஏழைப் பையனிடம்.

5. பனிக்காலம்

மொட்டை மரங்கள்
சட்டென்று பூத்தன
வெள்ளைப் பூக்களை.

6. தெளிவு

பிழையான இடத்தில்
முற்றுந் தரிப்பென அதுவும்
மெல்ல ஊர்ந்தது.

7. செய்தி அறிவிப்பு

மரம் படபடத்தது
குருவி ஒதுக்கிடம் பார்த்தது
புயல் தொடங்கியது.

8. உழைப்பு

பஞ்சுக்குள் அவன்
வெளியில் அவனது வேலையாள்
பனியள்ளும் கடமையில்.

9. கூட்டத்தில் குழப்பம்

காகங்களின் ஆரவாரம்
கடைசியில் காந்தி சிலையில்
எச்சங்களில் முடிந்தன.

# நம்பிக்கை

தளிர்க்கும் பருவத்திலேயே
தந்தையின் அரவணைப்புத் தறிக்கப்பட்டது.

ஒரு படத்தைக் காட்டி
"உன் அப்பா இவர்தான்" என்றார் தாயார்.
நம்பினான்.

வளர்ந்தபின் -
"தந்தை இறந்தது எப்படி?" என்றான்.
அரச படை சுட்டுக் கொன்றுவிட்டது"
என்று பதில் வந்தது.

கோயிலில் மூலத்தானத்துச் சிலையைக் காட்டி
"இது கடவுள். கும்பிடு"
என்று பணிக்கப்பட்டபோது கும்பிட்டான்.

தாயை நம்பியதுபோலவே
உடன்பிறப்புக்களையும்
உறவினர்களையும் நம்பினான்.

பள்ளிக்கூடத்திலே
ஆசிரியர்களை நம்பினான்.

சமூகத்திலே -
நண்பர்களை
பேச்சாளர்களை
எழுத்தாளர்களை
தொழில்நுட்பக் கலைஞர்களை
வைத்தியர்களை
எல்லோரையுமே நம்பினான்.

நம்பிக்கை அவனை வளர்த்தது.

அவனை மட்டுமா?

எங்கள் எல்லோரையும் வளர்த்தது
வாழ்வித்துக் கொண்டிருப்பது
நம்பிக்கைதான்.

நம்பிக்கை இல்லையென்றால்
வாழ்க்கை இல்லை
வளர்ச்சி இல்லை
வரலாறு இல்லை
மனித குலமே இல்லை!

யானையின் பலம் தும்பிக்கையில்
மனிதனின் பலம் நம்பிக்கையில்!

# சொந்த வெற்றியில் சுகங்கள் அதிகம்

உலகை நம்பு -
அது உன்னைத் தாங்கும்.

தமிழை நம்பு -
அது உன் ஒழுக்கத்தை உயர்த்தும்.

அழகுடன் பழகு -
அது உன் உள்ளத்தைச் சுத்தப்படுத்தும்.

நண்பரை நம்பு -
நீயும்
யாவரும் நம்பும் வகை நடந்து கொள்.

குருவை நம்பு -
அவரின் அறிவுரைகளைக் கடைப்பிடி.

உண்மையை நம்பு -
அதைக் கணமும் ஓம்பு.

தெய்வத்தை நம்பு.
தெய்வ சித்தத்தை நாடு.

எதனை நம்பவேண்டுமோ
அதனை நம்பு.

எல்லாவற்றிலும் மேலாக
உன்னை நம்பு -
உன் திறமையை நம்பு!

பொதுப்பணிகளுக்கு
மற்றவர் உதவிகளும் வேண்டும்.
ஆனால் -
உன் சொந்த வேலைக்கு

அவரைப் போய் இவரைப் போய்
உதவிக்குக் கெஞ்சாதே!

உன் கையே உனக்கு உதவி!
நீயே
உனக்குச் சிறந்த தொண்டன்!

உன் வேலை உனது விருப்பப்படி
நடைபெற வேண்டுமானால்
அதை நீயே செய்.

உன் வேலைக்கு நீயே பொறுப்பு.

வாழ்க்கையின் சோதனைகளை
நீயாகவே, சந்திக்க வேண்டும்!
சாதனைகள் பற்றியும்
நீயாகவே சிந்திக்க வேண்டும்!
சொந்த வெற்றியில் சுகங்கள் அதிகம்!

நீயாகச் சமைத்துச் சாப்பிடுவதற்கும்
பிறர் உனக்குச் சமைத்துப் போடுவதற்கும்
நிறையவே வித்தியாசம் உண்டு.

தன்னம்பிக்கை உள்ளவருக்கு
இப்படியெல்லாம்
புத்திமதிகள் சொல்லவேண்டியதில்லை!

# தன்னம்பிக்கை

பார்த்த அளவில் பதறாதே!
பயந்து பயந்து சாகாதே!

நேர்த்தியாக நெஞ்சை நிமிர்த்து!
நினைத்த செயலில் மனத்தைச் செலுத்து!

முடியாது என்று தயங்காதே!
முனைய முன்னே மயங்காதே!

உன்னை உனக்கே தெரியவில்லை!
உன் திறமை உனக்கே புரியவில்லை!

காற்றினை அணைத்துப் பார்!
அதன் வேகத்தைக் கணித்துப் பார்!
ஆற்றினைச் சற்றுப் பார்!
அதன் தொழில்களை உற்றுப் பார்!
நெருப்பினை அணுகிப் பார்!
அதன் சக்தியின் தணலைப் பார்!

இவை இயற்கைச் சக்திகள்!

நீயும் இயற்கையின் ஒரு படைப்பு.
உனக்குள்ளும் சக்தி ஒன்று
உறங்கிக் கிடக்கிறது.

எப்பொழுது நீ அதனை உணர்கிறாயோ
அப்பொழுது அது விழித்துக்கொள்ளும்!

அந்த விழிப்பில் -
உன்னை உனக்கே தெரியும்
உன் திறமை உனக்கே புரியும்.

அப்பொழுது -
நீ உன்னை நம்புவாய்!

நம்பிக்கை யாவற்றிலும் மேலானது
தன்னம்பிக்கையே!

தன்னம்பிக்கை உள்ளவர்க்குத்
தரணியெல்லாம் அடிபணியும்!

இல்லை அது என்று சொன்னால்,
கல்வி என்ன
செல்வம் என்ன
தலையெடுக்க முடியாது!

# நம்பிக்கை வேறுபாடுகள்

அவள் பூசிப்பது அவனை.
அவன் நேசிப்பதும் அவளைத்தான்.

ஆனாலும் -
மணமேடைக்குச் சகாரா மணல்மேடுகளைக்
கடக்க வேண்டியிருந்தது!
"ஏன்?"
கேட்டாள் மகள் தந்தையைப் பணிவோடு!
"சாதகம் பொருந்தவில்லை!"
போட்டார் அவர் பதிலைத் துணிவோடு!

அவள் சொன்னாள்:
நாம் இருவரும்
ஒருவரையொருவர் விரும்புகிறோம்.
ஒன்றாகக் காலம் எல்லாம்
நன்றாக வாழ்வோம் என்னும்
நம்பிக்கை எமக்கு இருக்கிறது.
நான் அவரை நம்புகிறேன்.
அவர் என்னை நம்புகிறார்.
இடையில் ஏன் சாதகம்?
சாதகத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை!

அவர் சொன்னார்:
எமக்கு இருக்கிறதே!
சாதகம் பொருந்தி வந்தால்மட்டுமே
வாழ்க்கை உங்கள் இருவருக்கும் சிறக்கும்
என்று நாம் நம்புகிறோம்.

குடும்பத்தில் மட்டுந்தானா?

சமூகத்தில் -
உயர்ந்த சாதி
தாழ்ந்த சாதி

சமயத்தில் -
ஆத்திகம்
நாத்திகம்

அரசியலில் -
சனநாயகம்
பொதுவுடைமை

எழுத்துலகில் -
மரபு
புதுமை

என்று நூறு நூறு
நம்பிக்கை வேறுபாடுகள்
மக்களைக் கூறுபோடுகின்றன!

ஒன்றையொன்று பழிப்பதுவும்
ஒன்றோடொன்று மோதுவதும்
பண்பாளர் உலகத்தில் இல்லாதவை!
அல்லாதார் உலகத்தில் பொல்லாதவை!

காலத்துக்கொவ்வா நம்பிக்கைகளுக்குக்
கட்டவேண்டும் பாடை!
மனிதாபிமானக் கொள்கைகளுக்குப்
போர்க்கவேண்டும் பொன்னாடை!

# நம்பிக்கையீனம்

வருகிறது பேருந்து -
அதில் ஏறிச் செல்ல வேண்டும்
வேலைத் தலத்துக்கு.

அந்த நேரத்தில் -
சாரதி பொறுப்பானவனா
வாகனத்தைச் சரியாகச் செலுத்துவானா
விபத்து ஏதாவது நடக்குமா
சில்லுக் காற்றுப் போகுமா
பெற்றோல் இல்லாமல் இடையில் நிற்குமா
என்றெல்லாம்
சந்தேகிக்கத் தெடங்குபவர்
பேருந்தில் ஏறப்போவதுமில்லை
வேலைத் தலத்தை அடையப் போவதுமில்லை.

குறிக்கோள் -
வேலைத் தலம்!
குறிக்கோளை அடைய
நம்பிக்கை வேண்டும்!

நம்பிக்கையீனம்
துணிச்சலைத் தூளாக்கும்!
துணிவின்மை
இலட்சியங்களைப் பாழாக்கும்!

நம்பிக்கையீனத்துக்கு
மற்றொரு பெயர்
சந்தேகம்!

நம்பிக்கையீனம்
கும்பல் கும்பலாக ஈனுவது சந்தேகங்களை!

சந்தேகங்களோ
சந்திக்கவரும் சந்தர்ப்பங்களைச்

சந்திக்கவிடாது சுவர் எழுப்பும்!

அந்தச் சுவர்
முன்னேற்றத்தை முடக்கும்
முதலைச் சுவர்!

அதனை இடிக்க வேண்டுமாயின்
மீண்டும் நம்பிக்கையிடமே
தஞ்சம் புக வேண்டும்!

தாமதமானாலும் அதுவே வழி
இல்லை...?

தலையைச் சொறிந்துகொண்டு
பிச்சை எடுக்க வேண்டியதுதான்!

# நம்பிக்கைத் துரோகம்

பட்ட கடனைச் சொன்ன திகதியில்
கட்டத் தவறும் கடனாளி -

மெய்யான கணக்கை பொய்யாக்கிக்
காசைக் கையாடும் வங்கிக் காசாளர் -

உபகரிக்கப் பட்ட பொதுநிதியைத் தானே
அபகரிக்கும் சமூக நலத் தொண்டர் -

உடன் பட்டுச் செய்த ஒப்பந்தம் தன்னை
உதாசீனம் செய்யும் பங்காளர் -

வாக்காளர்க் களித்த தேர்தல் வாக்குறுதி
காக்காத கட்சித் தலைவர்கள் -

காதல் காதல் என முத்தம் பொழிந்து பின்னர்
பாதியிலே கைகழுவும் காதலர்கள் -

கட்டியவள் காத்திருக்க கட்டாதவளைப் போய்க்
கட்டிப்பிடிக்கின்ற கணவன்மார் -

நம்பிமுன் சொன்ன அந்தரங்க மெல்லாம்
அம்பலப் படுத்தும் அகநண்பர் -

செய்வதெல்லாம் துரோகம்
துரோகங்களில் துரோகம்
உய்யவிடா நம்பிக்கைத் துரோகம்!

# மூட நம்பிக்கை

பூனை குறுக்காலை போனதென்று
ஆனைமேல் போக இருந்தவன்
ஆமைமேல் போனானாம்!

அட்டமி நவமியில்
பரீட்சை ஆரம்பமாவதால்
எழுதவேண்டாம் என்று
தகப்பனார் சட்டம் இட்டாராம்!

பல்லி சொன்ன காரணத்தைப்
பகுத்தறிந்த விருந்தாளி
வேண்டாம் உணவென்று
வெளியேறிப் போனாராம்!

இராகு காலம் என்று சொல்லித்
தாமதித்துத் தாமதித்து
நேர்முகப் பரீட்சைக்கு
நல்ல நேரம் சென்றவர்க்குக்
கெட்ட செய்தி காத்திருந்தாம்!

சாதகங்கள் சரிபார்த்து
வேதியர்கள் முறையாகச்
செய்துவைத்த திருமணமோ
மணம்மாறி வீசுகுதாம்!

நம்பிக்கைகள் வேண்டும்
- நல்லதாக வேண்டும்!
நம்பிக்கைகள் எமக்கு!
நம்பிக்கைக்கு நாமல்லோம்!

நம்பிக்கையால்
நன்மை உண்டாக வேண்டும்!
நன்மைகள்
எதனை

எவரை
ஏன்
எதற்கு
எவ்விதம்
நம்புகிறோம் என்பதைப் பொறுத்தன!

அதனால் -
பார்த்து நம்பு -
பகுத்தறிவோடு நம்பு!

கேடு விளைக்கும் நம்பிக்கை
மூட நம்பிக்கை!

கோடிக்குப் போகவேண்டும்
பழையதுகள்!
மாடிக்கு வரவேண்டும்
புதியதுகள்!

# எங்கள் நம்பிக்கைச் சின்னம்

விடுதலைப்பாதையில் -
கடு கதிக் காற்றுகள்!
திக்குமாறி வீசும் புயல்கள்!
சுக்குநூறாக்கும் சூறாவளிகள்!

கலங்கரை விளக்கமும்
கலங்கிய கங்குல்!

இருப்பினும் -
குறிதவறாது வந்துகொண்டிருக்கிறது
அந்தக் கப்பல்!

அதனை -
உறுதியுடன் கரை நோக்கிச்
செலுத்திவரும் மாலுமி -
குலத்தைக் காக்கப் பிறந்த குமரன்
இருளைத் நீக்கும் தினகரன்,
அஞ்சா நெஞ்சப் பிரபாகரன்!

இவன் தீரத்தை -
இராமனுக்கு ஒப்பிடலாமா?
முடியாது!
இராமன் -
வானரங்களின் உதவியுடன் அன்றோ
இராவணனை வென்றான்!

அர்ச்சுனனுக்கு ஒப்பிடலாமா?
அதுவும் முடியாது!
காண்டீவன் வெற்றி
கண்ணனின் வெற்றி அல்லவா?

இவனோ -
எவருக்கும் பின்னால் செல்லாத
இணையற்ற மகா வீரன்!

இமைப்பொழுதும்
விடுதலை வேட்கையை விட்டு
விலகாத வேங்கை!

சங்க காலத்துத் தமிழர் வீரத்தைச்
சங்கநாதம் செய்யும்
சிங்கத் தமிழன்!
தங்கத் தலைவன்!

தமிழன் யார்
என்பதனை -
சிங்களவருக்கு மட்டுமன்றி
உலகத்துக்கே உணர்த்திக்கொண்டிருக்கும்
உண்மைத் தமிழன்!

இடிகளாயினும்
மின்னல்களாயினும்
இருண்டு கறுத்த
முகிலின் திரண்ட திரையையும்
கிழித்துக்கொண்டு
பிரகாசிக்கும் உதய சூரியன்!

தன்னம்பிக்கையின்
மறுபெயர்
பிரபாகரன்!

தமிழர் நம்பிக்கைச் சின்னமும்
அவனே!

# நம்பிக்கை ஓட்டம்

தொடர்கிறது -
தொடர் ஓட்டமாக!
படர்கிறது -
படு வேகமாக!

ஐம்பது நாடுகளில் -
நம்பிக்கை வெளிச்சம்!

கனவுலகம் நனவுலகைச் சந்திக்கும்
தொடுவானப் பருவம்!
சோதனைகளைச் சாதனைகளாக்கத் துடிக்கும்
துணிச்சல் வயது!

விரைவாக எதிர்காலம்
விரியும் அந்த வேளை -
ஒருகாலை இழந்து நின்றான்
இந்தக் காளை!

ரெறி பக்ஸ் -
புற்று நோயாளரின் புத்தொளிச் சின்னம்!

கூற்றுவனையும் ஏமாற்றும் கொடிய நோய்!
மாற்று மருந்து இல்லாத மரணவாய்!
வலதுகாலை எடுத்தாலும்
அது -
வாய்மூடுவதாக இல்லை!

சாகும் நாட்களை எண்ணிக் கொண்டு
மனம் -
வேகும் துயரத்தில்
வெந்துகொண்டிருக்கையிலும் -
"நான் பெற்ற இத்துன்பம் பெறற்க
இவ் வையகம்"
என்னும் நல்லெண்ணம் -
தன் காலைத் தின்ற அடங்காப் பிசாசின்

புன்வாய்ப் பற்களைப்
பிடுங்க ஓடியது!

ஒற்றைக் காலால் நொண்டி நொண்டி
புற்றுநோயாளர் விதியை மாற்ற
நிதி திரட்டி ஓடியது-
143 நாட்கள்!

வீரிய வேகம் -
ஓடிய வழியிலேயே விழுந்து மறைந்தது!

சூரியன் மறைந்தாலும்
வெளிச்சம் மறையவில்லை!

ஆண்டுகள் தோறும்
நம்பிக்கைத் தொடர் ஓட்டம்!
ஆண்டுகள் தோறும்
இந்த நம்பிக்கைக்குத் தேர் ஓட்டம்!

முற்றிய நோயால்
இறக்க வேண்டிய ரெறி பக்ஸ்
மற்றவர்களுக்காக இறந்தபோது
கனடா அழுது புலம்பியது!

இன்று
உலகமே தொழுது வணங்குகின்றது!

மரணத்தை அளிக்கும்
புற்றுநோய்க்கு
மரண தண்டனை விதிக்கும் ஆய்வுகள்
தொடர்கின்றன -
தீவிரமாக -
தீ வீரமாக!

# நம்பிக்கைத் தீபாவளி

அசுரருக்குத் தாழ்வு
அமரருக்கு வாழ்வு
அநியாயத்துக்குத் தோல்வி
நியாயத்துக்கு வெற்றி
அதர்மத்துக்கு முடிவு
தருமத்துக்கு விடிவு

அகன்றது இருள்
சூழ்ந்தது ஒளி

என்னும் பெருமைகளோடு
தீபாவளி
ஆண்டுதோறும்
கொண்டாடப்படுகிறது!

எதிர்பார்ப்புகளை
ஏமாற்றங்கள் விழுங்கினாலும்
நம்பிக்கையை இழக்காது
இம்முறையும்
கொண்டாடுவோம்!

# விட்டுத் தள்ளு கவலையை

தம்பி!

கடுகு சிறிதானாலும்
காரம் பெரிது.
மல்லிகை சிறிதானாலும்
வாசம் பெரிது.
உடுக்கு சிறிதானாலும்
ஓசை பெரிது.

நீ
உயரத்தில் குறைவென்று
துயரத்தில் சுழலாதே!

தமிழை வளர்த்த
தவ முனிவர் அகத்தியனார்,
ஐரோப்பிய வரலாற்றை
ஆள்கின்ற நெப்போலியன்,
மனிதகுலம் ஏத்தும் அன்னை
புனித தெரேசா -

இவர்கள்
தோற்றத்தால் சிறியவர்தாம்!
ஆனாலும்
ஆற்றிய செயல்களாலே
பெரியவர்கள் ஆகிவிட்டார்கள்!

கட்டை என்ற கவலைவிட்டுக்
காரியத்தால் புகழை எட்டு!

திருக்குறள் அளவில் சிறியது
ஆனால் அது
பெருக்கிடும் பொருளோ பெரியது!

இப்பாரில் உள்ளவரில்
யப்பானியரைப் பார்!
தோற்றத்தால் கட்டையர்கள்
கைத்தொழிலால் நெட்டையர்கள்!

நெட்டையாக வளர்ந்தவரும்
நேர்மைகுன்றிக் கூனிடலாம்!
குட்டையாக உள்ளவரும்
குணத்தாலே நிமிர்ந்திடலாம்!

பௌதிக உயரத்தைப்
பலவழியால் வென்றிடலாம்!
அன்பாலே வென்றிடலாம்!
அறிவாலே வென்றிடலாம்!
துணிவாலே பணிவாலே
தொண்டாலே வென்றிடலாம்!

சாதனைகள் செய்திடலாம்!
சரித்திரங்கள் படைத்திடலாம்!

மேலும் -
குள்ளத்தை நினையாமல்
உள்ளத்தைப் பற்றி நினை!
அதை உயர்த்தல் அரிதாகும்!
இதை உயர்த்தல் எளிதாகும்!

உள்ளத்தின் பக்குவமே
உயரத்தை அளந்துரைக்கும்!

உள்ளத்தின் உயர்வொன்றே
உண்மையான உயர்வாகும்!

கட்டையென்னும் கவலையினை
விட்டுவிட்டு வேலையைப் பார்!

## வானதி

வானதி -
வையகத்தை வளப்படுத்த வந்த
வான நதி!

தமிழீழ விடுதலைக்குத்
தன் கலையைத் தானஞ்செய்யும்
மான மதி!
பரதம் தவஞ்செய்து பெற்ற
பதும நிதி!

கற்ற கலையைப்
பிற நாடுகளிலும்
பிறங்க வைக்கும்
பானுமதி!

வானதி வாணி நர்த்தனாலயம்
வளர்மதிகளின் இருதயம்.
பரதத்தோடு பண்பாட்டையும்
படிப்பிக்கும் பாளையம்.
துவளும் மனங்களையும்
துள்ளவைக்கும் தேனியம்.

கலாவல்லியின் பதி
திரு. தேசிங்குராஜா
கண்துஞ்சாப் பார்த்தசாரதி
நேர்மையின் தளபதி
நிர்வாக அதிபதி.

இவர்களின் செல்வங்கள் -
கிஷோத்தனன்
ஷியாம்
தமிழினி
வித்துவத் தோட்டத்தின் விளைச்சல்கள்!
புத்தெழில் உலகத்தின் வெளிச்சங்கள்!

ஏழுவயதில் அரங்கேறிச்
சூழும் உலகைச் சொக்கவைத்துக்
கின்னஸ் புத்தகத்தைத்
திறப்பித்திருக்கின்றார்
தமிழினி!

வானதி குடும்பம்
சாதனைக் கோயில்!

நாட்டிய தாரகையின் வரலாறு
முற்றுப்புள்ளி இல்லாத தொடராறு!
அதனால் -
பதினைந்தாவது ஆண்டு நிறைவு
அதிகாலைப் புதுமை உறவே!

தொடர்க இதயத் துடிப்பு!
படர்க பரதப் படைப்பு!

விழாச் சிறப்புற
ஆடல் வல்லானை இறைஞ்சி
வாழ்த்துகின்றேன்!

# தமிழின் உச்சி குளிர்வதாக!

கலைஞர் தாசனே, கவியரசே,
தங்க வயலே, பொங்கும் புனலே,
பெய்யெனப் பெய்யும் மழையே,
நீ -
வான் மழையிலும் மேலானவன்!
ஏனெனில் -
உன் கவிமழை -
நந்தவனங்கள், சோலைவனங்கள்,
கந்தவனங்கள் என்றல்லாது
பாலைவனங்களிலுமல்லவா
பெய்கின்றது!

பாலைவனங்களையும் பசுமையாக்கும்
பாவலனே,
உன் தேன் மழையில்
நனைந்து தோய்ந்து
நடமாடிய தோகை மயில்கள்
தமிழ் வளர்க்கும் கனடாவிலிருந்து
வாழ்த்துகின்றன!

உன் பிறந்த தினம்
கவிதையின்
பிறந்த தினமாகுக!
கவிஞர்களின்
சிறந்த தினமாகுக!

பெய்யென்னாது போனாலும்
பெய்யவல்ல முகிலே,
எழுக திசைகளைக் கடந்து!
பொழிக
வைரங்களையும் முத்துக்களையும்
தொடர்ந்து!

கவிதையின் உச்சி
உன்னால் உயர்வதாக!
தமிழின் உச்சி
தன்னால் குளிர்வதாக!

வைரமுத்துபோல் பொன்மணி வாழ்க!
பொன்மணிபோல் வைரமுத்து வாழ்க!

---

கவியரசு வைரமுத்துவின் 29ஆவது நூலாகிய "பெய்யெனப் பெய்யும் மழை" என்னும் கவிதைத் தொகுதி மாண்புமிகு முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் வெளியிடப்பெறுவதை அறிந்து மகிழ்ந்து கனடாவாழ் தமிழ்க் கலை இலக்கிய நண்பர்கள் சார்பில் அனுப்பிய வாழ்த்துக் கவி.

# ஓவியா! செய்வியா?

ஓவியா,
நீதான் -

உலகத்தின் உள்ளங்களில்
ஊஞ்சலாடும் வண்ண வண்ணப் பாவையா?

விற்பனப் புலவரைப்போல்
கற்பனைகள் சித்திரிக்கும் தோகையா?

பலவான கலைகளையும்
உள்வாங்கி ஓங்கி நிற்கும் தூபியா?

அழகற்ற காட்சியையும்
அற்புதமாய்ப் பேச வைக்கும் ஆவியா?

இடத்துக்கிடம் முருகியலின்
இதயத்தை எடுத்துச் செல்லும் காவியா?

வரலாற்றைக் காலமென்னும்
கடல்தாண்டி வாழ வைக்கும் நாவியா?

அடைபட்ட கதவுகளை
உடையாது திறக்க வல்ல சாவியா?

கடைகெட்ட மனங்களிலும்
காந்த மணம் வீ சவல்ல பூவையா?

நாடு மொழி இன மதக்
கோடுகளைத் தாண்டிச் செல்லும் யோகியா?

மந்திரமோ தந்திரமோ
மாயவித்தை தான்புரிந்தோ ஓவியா -

அவதியுறும் இவ்வுலகின்
கவலைகளைப் போக்க வேண்டும்! செய்வியா?

## காதலுக்கு கண் தானம்

சித்திவிநாயகப் பெருமான்
திருக்கோயிலிலே விழித்து
முத்துமாரி அம்மன்
அருளிலே குளித்து
பட்டினப் பாங்கிலே வளர்ந்து
எட்டுத் திக்கிலும் புகழ்பரப்பும்
குரும்பசிட்டியிலே
ஒரு குத்துவிளக்கு -
ஒரேயொரு குத்துவிளக்கு!

அதிலே -
இரண்டு திரிகள் பிரகாசிக்கின்றன -
பவானியும் மகாதேவனும்!

கல்வித் துறையிலே
திரு. பொன். பரமானந்தரும்
பத்திரிகை உலகிலே
ஈழகேசரி நா. பொன்னையாவும்
இலக்கிய வானிலே
இரசிகமணி கனக செந்திநாதனும்
சாதனையாளர் என்றால் -
அகவாழ்விலே -
காதல் உலகிலே
சாதனை படைத்தவர்கள்
பவானியும் மகாதேவனும்!

ஒரு தென்னை மரம்
இரண்டு கிளைகளாக வளர்வது
அதிசயந்தான்!
ஆனால் இவர்கள்
இரண்டு தென்னை மரங்கள்
ஒன்றாக இணைந்து வளரும்
அற்புத அதிசயத்தையன்றோ
ஆக்கியிருக்கிறார்கள்!

காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள்!
அந்தக் கண்ணில்லாக் காதலுக்குக்
கண் தானஞ் செய்த உங்களைக்
கைகூப்பி வணங்குகின்றோம்!

சைவத்தில்
சிவபெருமான் மாதொருபாகன்.
வையத்தில்
மகாதேவன் மாதொருபாகன்!

"காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்?"

அந்த இன்பத்தை
எள்ளளவும் பிசகாது
இருபத்தைந்து வருடங்களாக
அனுபவித்துவரும்
அன்றிற் பறவைகளை
அன்போடு வாழ்த்துகின்றோம்!

காதல் உலகம்
காலம் எல்லாம் வாழ்த்த
வாழ்க! வாழ்க! வாழ்க!

---

வாழ்க்கையில் இருபத்தைந்து வருடங்களை நிறைவுசெய்த மகாதேவன் - பவானி தம்பதிகளை வாழ்த்தியது.

# திரு. பொன். பரமானந்தர் மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழா வாழ்த்து!

வாழ்த்தி வணங்குதற் குரியவர்
உபாத்தியாயர் பொன். பரமானந்தர் -
"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"
என்பதால்.

உதய சூரியனுக்கு மற்றொரு பெயர்
அதிபர் பொன். பரமானந்தர் -
அறியாமை இருளை அகற்றியவர்
என்பதால்.

சொல்லால் செயலால் மனத்தால்
எல்லோரும் காணவாழ்ந்த வள்ளுவர் -
குரும்பசிட்டிக்கு ஒழுக்கத்தை வகுத்தவர்
என்பதால்.

அறிவும் ஆற்றலும் மிகுந்த
குரும்பசிட்டிக்குத் தந்தையானவர் -
அதன் வளர்ச்சிக்குப்
பிள்ளையார் சுழி போட்டவர்
என்பதால்.

விரும்பி உலகம் போற்றும் வகையிற்
குரும்பசிட்டியைப் பொன்வயலாக்கிய உழவர் -
உன்னத கலைகளுக்கு வித்திட்டவர்
என்பதால்.

எத்தனை அறிஞர் எத்தனை எழுத்தாளர்
எத்தனை கலைஞர் பிறந்தனர் எழுந்தனர்? -
அத்தனை அற்புதத் தொட்டில்
அவர் நிறுவிய கல்விக் கோயில்!

அட்டூழியத்தால் அது சிதைந்துவிட்டாலும்
கெட்டழியாது, அழிக்க முடியாது -
அதிசக்திமிக்க அமுதசுரபிக்கு
அழிவில்லை!

பொதுவானவர் புரிவது கடமை கண்ணியம்
பதமானவர் பதிவது பொதுநலம் புண்ணியம் -
எது கூறினும் இவர் சேவைக்கு
இணையில்லை!

நூறுவயது -
கொண்டாடப்பட வேண்டியதுதான்.

நூறுகள் பல காணவுள்ள ஒரு
கல்விக்கூடத்தின்
முதல் நூற்றாண்டைக் கொண்டாடுபவர்கள்
கொடுத்து வைத்தவர்கள்!

வாழ்க கற்பகமாகிய குருமணி!
வளர்க நம் குரும்பைநகராகிய கண்மணி!
வாழ்க திரு. பொன். பரமானந்தர் கல்லூரி!
சூழ்க இன்பம்!



அன்பர்களே!

எனது தமிழில்
எதுதான் இல்லாது போனாலும்
உங்கள் நண்பன்
நான்
இருப்பேன்!
நீங்கள் என்னை
நிச்சயம் தரிசிக்கலாம்!
ஏனென்றால் -
சொற்சுவை பொருட்சுவை
இறுக்கம் தொய்வு
ஆழம் அகலம்
பழமை புதுமை
தொடக்கம் முடிவு
எல்லாமே
உங்கள் நண்பன்தான்!

- வி. கந்தவனம்

# வரிக்கவிகள்